பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆனி 22, வியாழக்கிழமை 06.07.2017 | கதிர் 242

## தலைமன்னார் வீதியில் மனித மண்டையோடு மீட்பு

மன்னார், ஜூலை 06

தலைமன்னாரில் மனித மண்டையோடு ஒன்று மீட்கப்பட்ட நிலையில், அந்த இடத்தில் மேலும் மனித எச்சங்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்தில் நேற்றுப் பிற்பகல் மன்னார் நீதிவான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா முன்னி

பக்கம் 18

# விக்கி - சம்பந்தன் விரைவில் சந்திப்பு அதுவரை சுமுகம் பேண உடன்பாடு!

### முரண்பாட்டை ஏற்படுத்தும் விடயங்களைத் தற்காலிகமாகத் தவிர்க்கவும் முடிவு



யாழ்ப்பாணம், ஜூலை 06

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும்,எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தனும், வடக்கு மாகாண முதல மைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரனும் நேற்றுத் தங்களுக்குள் மின்னஞ்சல் மூலம் கடிதப் பரிமாற்றம் செய்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து வடமாகாண சபை விடயத்தில் ஆளும் தரப்பினர் கன்னை பிரிந்து மோதுவதைத் தவிர்த்துத் தற்காலிகமாகவேனும் சுமுகமாகச் செயற்பட இணங்கி யுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

சம்பந்தனும், விக்கியும் விரைவில் கொழும்பில் சந்தித்துப் பேசி விடயங்களுக்குத் தீர்வு காண்பர் என்றும் –

அதுவரை மோதல் போக் கைத் தவிர்த்துக் கொள்ள மாகாண சபையில் உள்ள ஆளும் கட்சியின் இரு தரப்பி

பக்கம் 18



# காணாமற் போனோர் சட்டமூலம்; பின்வாங்கியது நல்லாட்சி அரசு

## ஏ.எல். பரீட்சை ஓக. 08 புலமைப் பரிசில் 20 இல்

கொழும்பு, ஜூலை 06

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 08 ஆம் திகதி முதல் செப்டம்பர் 02 ஆம் திகதி வரை நடைபெற உள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் கூறி

பக்கம் 18

## பௌத்த மகாநாயக்கர்களின் அழுத்தத்துக்கு அடிபணிந்தது

கொழும்பு, ஜூலை 06

**காணாமற்போனோர் தொடர்பான சட்டமூலத்தை நடைமுறைப்படுத்தாமல் இழுத்தடித்து வந்த நல்லாட்சி அரசு, அதனை நடைமுறைப்படுத்துவதற்கான சட்டமூலத்தை நிறைவேற்றுவதிலிருந்து நேற்றுக் கடைசி நேரத்தில் பின்வாங்கியது.**

இந்தச் சட்டமூலத்தைப் பௌத்த மகாநாயக்கர்களும் மத பீடங்களும் கடுமையாக எதிர்த்து வந்த நிலையில், அந்த எதிர்ப்புக்கு அடிபணிந்தது அரசு.

பலவந்தமாகக் காணாமல் போகச்செய்வதிலிருந்து ஆள்களைப் பாதுகாக்கும் சர்வதேச சமவாய சட்டமூலத்தை தாமதப் படுத்துமாறு மகாநாயக்க தேரர்

பக்கம் 18

## திருடர்களைப் பாதுகாக்கிறது அரசு; அதிருப்தியில் நாட்டின் ஜனாதிபதி

### சபையில் ஜே.வி.பி. தலைவர் அநுரகுமார

கொழும்பு, ஜூலை 06

திருடர்களை அரசு பாதுகாத்து வருகின்றது என்றும், இதனால் அமைச்சர்கள் மீது ஜனாதிபதி அதிருப்தியில் இருக்கின்றார் என்றும் ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழுப் பணிப்பாளர் நாயகத்தின் சம்பளம் மற்றும் படிகளில் திருத்தம் மேற்கொள்ளல் தொடர்பான விவாதத்தில்

பக்கம் 17

## மகாநாயக்கர்களை சமாளிப்பதற்காக அவர்களிடம் நேரில் செல்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஜூலை 06

நல்லாட்சி அரசு முன்னெடுத்திருக்கும் அமைதி முயற்சிகள், அதிகாரப்பகிர்வுத்திட்டம், அரசமைப்பு மாற்ற எத்தனங்கள், காணாமற்போனோர் விடயத்தைக்கையாளும்பொறி முறைபோன்றவற்றுக்குஎதிராக பௌத்தமதபீடத்தினர் கொதித்து எழுந்துள்ள நிலையில் –

அவர்களை நேரில் சந்தித்துச் சமாளிப்பதற்கான முயற்சிகளை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னெடுத்திருக்கின்றார் என அரசுடன் தொடர்

பக்கம் 18

## இனவாதத்தைத் தூண்டிவரும் செயற்பாடுகளுக்கு ஆதரவளிப்பது தண்டனைக்குரிய குற்றம்

### நாடாளுமன்றில் எச்சரிக்கை விடுத்தார் பிரதமர்



கொழும்பு, ஜூலை 06

குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக இனவாதம் மற்றும் அடிப்படைவாதத்தைத் தூண்டி விடும் செயற்பாடுகளுக்கு ஆதரவளிப்பது தண்டனைக்குரிய குற்றம் என்று சபையில் எச்சரிக்கை விடுத்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இவ்வாறான செயற்பாடுகளுக்கு கடந்த அரசு அனுசரணை வழங்கியது எனவும், தற்போதைய அரசு அதற்கு ஒரு போதும்

பக்கம் 17

## பா.ஜ.க. தமிழகத் தலைவர் தமிழிசை இன்று யாழில்!

### நாளை முள்ளிவாய்க்காலுக்கு விஜயம்



கொழும்பு, ஜூலை 06

இந்தியாவின் ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழக மாநிலத் தலைவரான தமிழிசை சௌந்தரராஜன் நேற்றுக் கொழும்பு வந்து சேர்ந்தார்.

தனிப்பட்ட விஜயமாக

பக்கம் 18

## யுத்தக் குற்றங்களில் இருந்து படையினரைப் பாதுகாத்தோம்!

### மார்தட்டுகின்றார் ஜனாதிபதி மைத்திரி

கொழும்பு, ஜூலை 06

‘இலங்கையின் வீரமிகு படையினர் சர்வதேச நீதி மன்றத்துக்குச் செல்ல வேண்டியிருந்தநிலையை நாம் மாற்றியமைத்தோம். உலகில் எந்தவொரு நாடோ, சர்வதேச

பக்கம் 18




அப்பா... காலில் விழுந்து கதறப் போறாரோ...?

## போர்க் குற்றம் உறுதியானால் படையினர் மீது நடவடிக்கை

### புதிய இராணுவத் தளபதி உறுதி



கொழும்பு, ஜூலை 06

‘இலங்கை இராணுவத்தினர் போர்க் குற்றங்கள் புரிபவர்கள் அல்லர். ஒழுக்கமும் அர்ப்பணிப்புமே

பக்கம் 18

## அரசமைப்பு வழிகாட்டல் குழுவின் பணியில் நேற்று மிகவும் மும்முரமான முன்னேற்றம்

### இடைக்கால அறிக்கையை இறுதி செய்யும் விடயம் வேகமாக நகர்வு

கொழும்பு, ஜூலை 06

அரசமைப்புக் கவுன்ஸிலின் வழிகாட்டல் குழு நேற்றுப்பிற்பகல்மீண்டும் கூடியபோது, இடைக்கால அறிக் கையின் நகலை இறுதி செய்யும் பணி வழமைக்கு மாறாக வெகு

பக்கம் 18

# புதிய அரசமைப்பு தயாரிக்கப்பட்டமை பார்த்துக் கொண்டிருப்பதற்கல்லவே

## மகாநாயக்க தேரர்களுக்கு ராஜித பதிலடி



கொழும்பு, ஜூலை 6

புதிய அரசமைப்பு தயாரிக்கப்பட்டுள்ளது வெளியிடப்படுவதற்கே அன்றி, வெறுமனே பார்த்துக் கொண்டி ருப்பதற்கு அல்ல என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அரசு 62 லட்சம் மக்கள் வழங்கிய ஆணையையே செயற்படுத்துவதாகவும், அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற் கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் அஸ்கிரிய பீடத்தில் கூடிய மகாநாயக்கர்கள், புதிய அரசமைப்பு அவசியமற்றது என்று தீர்மானித்தனர். இது தொடர்பில் அரசின் நிலைப்பாடு என்ன என்று இதன்போது ஊடகவியலாளர்கள் வினவியதற்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசமைப்புச் சபையின் நடவடிக்கைகள் முன்னோக்கி எடுத்துச்செல்லப்படும். இதன் இறுதி முடிவை நாடாளுமன்றமே எடுக்கும்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன தற்போதுள்ள அரசமைப்பைக் கொண்டு வந்தவேளை, எதிர்த்தவர்கள், இப்போது, அதனையே செயற்படுத்த வேண்டும் என்று கூறுவது ஏன் என்று தெரியவில்லை.

அரசமைப்பு உருவாக்கப்பட்டதன் பின்னர், முதலில் நாடாளுமன்றத்தில் முன் வைக்கப்பட்டு, மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும். பின்னர் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். சட்டப்படி அந்த நடவடிக்கைகள் எதிர் காலங்களில் முன்னெடுக்கப்படும். இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் முதலாம் மற்றும் இரண்டாம் அரசமைப்புகள் நிறைவேற்றப்பட்ட போது அல்லது மஹிந்த ராஜபக்ஷவால் 18 ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்ட போது, இதுபோன்ற ஜனநாயக செயல்முறை பின்பற்றப்படவில்லை.

எனவே, வரலாற்றில் முதல் முறையாக ஜனாதிபதி ஒருவர் சுயவிருப்புடன், தனது அதிகாரங்களை ஜனநாயகவாதியாக மக்களுடன் பகிர்ந்து கொள்ள சட்டம் மற்றும் நிலவும் அரசமைப்புக்கு மதிப்பளித்து செயற்படும்வேளை, அதற்கு ஏன் எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகின்றது என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை.என்றார். (எ)

## அ' புரம் வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை பிரிவை நிர்மாணிக்க அனுமதி

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் விபத்து மற்றும் தீவிர சிகிச்சை பிரிவைநிர்மாணிப்பதற்கான ஒப்பந்தத்தை M/s Sripalie Cont ract ors (Pvt.) Ltd நிறுவனத்துக்கு வழங்குவதற்கு அரசு அனுமதியளித்துள்ளது.

அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிலையான கொள்ளல் குழுவின் பரிந்துரை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் பரிந்துரை ஆகியவற்றுக்கு அமைய இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சுகாதார, போசனை மற்றும் சுதேச வைத்திய அமைச்சர் டொக்டர் ராஜித சேனாரத்ன வால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (எ)

## வவுனியா பாடசாலை வளாகத்தில் மீட்கப்பட்டிருந்த நீர் நாய் உயிரிழப்பு

வவுனியா - ஸ்ரீராமபுரம் திருஞான சம்பந்தர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை வளாகத்துக்குள் இருந்து மீட்கப்பட்ட நீர் நாய் பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

அந்த நீர் நாய் நேற்று முன்தினம் பாடசாலை வளாகத்தில் இருந்து வனஜீவராசிகள் திணைக்களத்தினரால் மீட்கப்பட்டுள்ளது.

அந்தப்பகுதி கிராம அலுவலர் மூலம் பாடசாலை வளாகத்தில் நீர் நாய் ஒன்று நிற்பதாக வழங்கப்பட்ட தகவலையடுத்து அதனை வனஜீவராசி கள்திணைக்களத்தினர் மீட்டுச் சென்றுள்ளனர்.

நீர் நாய் மீட்கப்பட்ட போது அதன் கழுத்துப் பகுதியில் வளர்ப்பு நாய் ஒன்று கடித்த காயம் காணப்பட்டுள்ளது. இந்த நிலையில், அதற்கு சிகிச்சை வழங்கப்பட்ட போதும், சிகிச்சை பலனின்றி அது உயிரிழந்துள்ளது.

இருப்பினும், வவுனியாவில் முதன் முதலாகக் கண்டு பிடிக்கப்பட்ட அந்த நீர் நாய் ஓர் அரியவகை விலங்கினம் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)



## வாவெட்டி ஈஸ்வரப் பெருமானுக்கு 33 வருடங்களின் பின் பூஜை வழிபாடு

வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தோடு தொடர்புடைய வாவெட்டி மலையில்அமைந்திருக்கின்ற வாவெட்டி ஈஸ்வர பெருமானுக்கு 33 வருடங்களின் பின்னர் நேற்று ஆலய பரிபாலன சபை உள்ளிட்ட மக்களால் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

1984 ஆம் ஆண்டுக்குப் பின்னர் போர்ச் சூழ்நிலை காரணமாக அந்த ஆலயத்துக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

எனவே, இவ்வருடம் வனவள பாதுகாப்பு பிரிவு, பொலிஸார் மற்றும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவு அதிகாரிகளோடு கலந்துரையாடித் தீர்க்கமான முடிவின் பின்னர் அனைவரையும் அழைத்துச் சென்று நேற்று வாவெட்டி ஈஸ்வர பெருமானுக்குரிய வழிபாடுகளை ஆலய பரிபாலனை சபையினரும் மக்களும் இணைந்து மேற்கொண்டனர். (எ-81)





## நாட்டில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சியால் வற்றி வறண்டு வருகிறது நந்திக்கடல்

முல்லைத்தீவு - மாவட்டத்தில் வறட்சி அதிகரித்துள்ளதால் மாவட்டத்தின் மிகப் பெரிய வாவியாகக் கருதப்படும் நந்திக்கடல் வற்றி விட்டது என அந்தப் பகுதி மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.



வறட்சி உச்சநிலை அடைந்துள்ளதால் 4 ஆயிரத்து 800 இற்கு மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று முல்லைத்தீவு மாவட்டசமாசங்களின்தலைவர் மரியதாஸ் அந்தோனிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நந்திக் கடலில் அதிகமான சேற்று மண் தேங்கி நின்றமையே நீர்வற்றிப் போவதற்கு முக்கிய காரணம் என்று முல்லைத்தீவு கடல் நீரியல் திணைக்கள அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

எதிர்காலத்தில் நந்திக் கடலை ஆழப்படுத்தி அதிக மான நீரைத்தேக்கி வைப்பதற்குரிய நடவடிக்கைகள் துரித கதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நந்திக் கடல் பகுதியில் நீர் குறைந்த காரணத்தினால் அண்மைக் காலமாக அதிகளவிலான மீன்கள் இறந்துள்ளமை தெரிந்ததே.

## இலங்கைக்கு சுற்றுலா செல்லும் தமது பிரஜைகளுக்கு பிரிட்டன் எச்சரிக்கை

இலங்கைக்கு சுற்றுலாப் பயணம் மேற்கொள்ளும் தமது நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கான எச்சரிக்கையை பிரிட்டன் அரசு புதுப்பித்துள்ளது.

கடந்த மாதம் புதுப்பிக்கப்பட்டுள்ள ஆலோசனைக்கமைய இலங்கையில் காணப்படுகின்ற பாலியல் தாக்குதல் ஆபத்துக்கள், ஆபத்தான குடிபானங்கள், வீதி விபத்துக்கள், டெங்கு தொற்று மற்றும் கடன் அட்டை மோசடி தொடர்பில் சுற்றுலாப் பயணிகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த ஜனவரி மாதம் முதல் மே மாதம் 29 ஆம் திகதி வரை டெங்கு நோய் தொற்றால் 50 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

எனவே, இது தொடர்பில் சுற்றுலா பயணிகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் ஆயுதமேந்திய கும்பல்கள் செயற்படுகின்றன எனவும், கடத்தல் மற்றும் வன்முறைக்கு அவர்கள் பொறுப்பாளிகள் என அறியப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கையின் நீதித்துறையின் செயற்பாடுகள் மிகத் தாமதமாகவே உள்ளன எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir



# வித்தியாவின் உடலில் 8 காயங்கள் இருந்தன மூன்று வழிகளில் மரணம் சம்பவித்திருக்கலாம்

## நேற்று சட்ட வைத்திய அதிகாரி சாட்சியம்

யாழ்ப்பாணம், ஜுலை 06

வித்தியாவின் உடலில் 8 காயங்கள் இருந்தன எனவும் மூன்று சந்தர்ப்பங்களில் அவரது இறப்பு நிகழ்ந்திருக்கலாம் எனவும் சட்ட வைத்திய அதிகாரி எஸ்.மயூரதன் நேற்று சாட்சியம் அளித்தார்.

ஒன்று துணியினால் வாயை அடைத்த போது, சுவாசப்பாதை அடைபட்டு உயிரிழப்பு நிகழ்ந்திருக்கலாம்,

தலைப்பகுதியில் ஏற்பட்ட அடிகாயத்தினால் இரத்த கசிவு ஏற்பட்டு அதிகமான குருதி வெளியேற்றத்தினால் மரணம் சம்பவித்திருக்கலாம். அல்லது, கழுத்தில் கட்டப்பட்ட பட்டி (றை) இறுக்கப்பட்டதன் காரணமாக இறப்பு நிகழ்ந்திருக்கலாம் அல்லது மூன்றும் ஒரே நேரத்தில் நிகழ்ந்திருக்கலாம் எனவும் கூறினார்.

வித்தியாவின் பின் பக்கம், தலை, இடுப்பு போன்ற இடங்களில் காயங்கள் காணப்பட்டன. காலில் முள்ளு குத்திய அடையாளங்களும் காணப்பட்டன. கன்னம், உதட்டிலும் காயங்கள் இருந்தன.

வித்தியாவின்பெண்உறுப்பை பரிசோதனை செய்த போது கூட்டுவன்புணர்விற்கானகாயங்கள் இருந்தன எனவும் அவர் சாட்சியமளித்தார்.

வித்தியாகூட்டுவன்புணர்வின் பின்னர்படுகொலைசெய்யப்பட்டமை தொடர்பிலான வழக்கின் 'ட்ரயல் அட் பார்' விசாரணை நேற்று ஆறாவது நாளாகவும் நடைபெற்றது.

மேல் நீதிமன்ற நீதிபதிகளான மாணிக்கவாசகர் இளஞ்செழியன், அன்னலிங்கம் பிரேம்சங்கர் மற்றும் பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையில் யாழ்.மேல்நீதிமன்றத்தில் இந்த விசாரணை நடைபெற்று வருகின்றது.

விசேட வழக்குத் தொடுநரான சட்ட மா அதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் குமார் ரட்ணம் மற்றும் யாழ். மேல்நீதிமன்ற அரசதரப்பு சட்டத்தரணி நிஷாந்த் நாகரட்ணம் ஆகியோர் இந்த வழக்கில் ஆஜராகியுள்ளனர்.

மாணவி சிவலோகநாதன் வித்தியா படுகொலை வழக்கின் 22 ஆவது சாட்சியாளரான தடயவியல் பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர் ரொஷான் சந்தனகுமார நேற்று சாட்சியமளித்தார்.

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தில் சடலம் ஒன்று இருப்பதாகக் கிடைத்த தகவலுக்கு அமைய மற்றுமொரு அதிகாரியுடன் தாம் அங்கு சென்றார் என சாட்சியாளர் தெரிவித்தார்.

அங்கு மலசலக்கூடம் ஒன்றுக்கு அருகாமையில் சப்பாத்து கிடந்தது. பின்னால் பாழடைந்த வீடொன்று இருந்தது. அலரி மரங்களுக்கு இடையில் கருப்பு நிற பொலித்தீனால் மூடப்பட்ட மூன்று இடங்களை அவதானித்தேன்.

சம்பவ இடத்தை புகைப்படம் எடுத்தேன். சட்ட வைத்திய அதிகாரியின் வருகையை அடுத்து பொலித்தீன் நீக்கப்பட்டது. சடலத்தின் இடது நெற்றியில் சிறு காயம் இருந்தது. கண்ணில் சிறு புழுக்கள் காணப்பட்டன.

மார்புக்கு சற்று மேல் சந்தேகமான இரண்டு ரோமங்களை அவதானித்து அதனை புகைப்படம் எடுத்தேன். பின்னர் பாதுகாப்பாக அவற்றை சேகரித்து பகுப்பாய்விற்கு அனுப்பி வைத்தேன்.

சடலம் அங்கிருந்து அகற்றப்பட்ட போது பின்பக்க இடுப்புப் பகுதியில் சிறு கீறல் காயங்களை அவதானித்தேன். சம்பவ இடத்திலிருந்து வேறு விஞ்ஞான ரீதியான தடயங்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. - என்றார்

தடயவியல் பொலிஸ் உத்தியோகத்தர் ரொஷான் சந்தன குமார.

இதேவேளை, 13 சான்றுப் பொருட்கள் திறந்த நீதிமன்றத்தில் பிரித்துக் காண்பிக்கப்பட்டன. அவற்றை சாட்சியாளர் அடையாளம் காண்பித்தார். பெண்கள் அணியும் உள்ளாடைகள் போன்ற சான்றுப்பொருட்களும் காண்பிக்கப்பட்டன.

சீல் வைக்கப்பட்ட இரண்டு பொதிகளும் நேற்று மன்றின் அனுமதியுடன் திறக்கப்பட்டன. அவை பகுப்பாய்விற்காக ரோமங்கள் அனுப்பிவைக்கப்பட்ட உறைகள் என சாட்சியாளர் அடையாளம் காண்பித்தார்.

சாட்சியாளரிடம் குறுக்கு விசாரணைகளை ஆரம்பித்த மூன்றாம், நான்காம், ஆறாம் சந்தேகநபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி மஹேந்திர, ரோமங்கள் எப்போது பகுப்பாய்விற்கு அனுப்பிவைக்கப்பட்டன எனக் கேள்வி எழுப்பினார்.

2015 ஜுன் மாதம் முதலாம் திகதி ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் அனுமதி பெறப்பட்டு யாழ். தடயவியல் பிரிவினரால் அரசபகுப்பாய்வுதிணைக்களத்தில் ரோமங்கள் ஒப்படைக்கப்பட்டன என அவர் பதிலளித்தார்.

வழக்கின் முக்கியமான ஒரு தடயத்தை 17 நாட்களின் பின்னர் அனுப்பி வைத்தமைக்கான காரணம் என்ன? என சட்டத்தரணி வினவினார்.

அந்த தினத்திலேயே இந்த வழக்கிற்கான ஆரம்ப சான்றுப் பொருள் முற்படுத்தப்பட்டது. அதனை அனுப்பி வைப்பதில் தடைகள் எதுவும் இருக்கவில்லை என சாட்சியாளரான தடயவியல் பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர் கூறினார்.

நுணுக்கமான கருவியைக் கொண்டு ஆய்வு செய்தபோது உடலில் இருந்தது விந்தணுவா? புழுவா? பழுதடைந்த இரத்தமா? என சட்டத்தரணி சாட்சியாளரிடம் வினவியுள்ளார். புழுக்கள் அப்போது வளர ஆரம்பித்திருந்தன என்றார் சாட்சியாளர்.

சடலத்தின் வலது கை ஆட்காட்டி விரலை சோதனைக்குட்படுத்தியதன் பின்னர் விரல் பாதுகாப்பாக பொலித்தீனால் கட்டப்பட்டதாகவும் சாட்சியாளர் தெரிவித்துள்ளார்.

மாணவியின் சடலத்தில் இருந்து பெறப்பட்ட ரோமம் தொடர்பிலான ஜீன் டெக் நிறுவன அறிக்கையின் பிரதிகள் நேற்று சந்தேகநபர்கள் சார்பில் ஆஜரான அனைத்து சட்டத்தரணிகளுக்கும் வழங்கப்பட்டன.

பின்னர் 05 ஆம் இலக்க சந்தேகநபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ரகுபதி குறுக்கு விசாரணைகளை ஆரம்பித்திருந்தார்.

ரோமங்கள் தவிர வேறு ஏதேனும் சான்றுப்பொருட்கள் காணப்பட்டதா என அவர் வினவினார்.

விஞ்ஞான தொழில்நுட்ப ரீதியாக நிரூபிக்கக்கூடிய வேறு எந்தப் பொருளும் கைப்பற்றப்படவில்லை என சாட்சியாளர் பதிலளித்தார்.

சந்தேகத்திற்கிடமான சான்றுகள் எதுவும் இல்லை என யாழ். பொலிஸ் நிலையத்தில் சி.ஐ.டியினரிடம் வாக்குமூலம் அளித்தீர்கள் என நான்காம், ஏழாம் மற்றும் ஒன்பதாம் சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கேதீஸ்வரன் சாட்சியாளரிடம் வினவினார்.

தமது விசாரணை தொடர்பில் மாத்திரமே வாக்குமூலம் அளித்திருந்ததாக சாட்சியாளர் தெரிவித்தார்.

சடலத்திலும், சடலம் காணப்பட்ட சூழலிலும் பரிசோதித்து பார்த்தபோது, வேறு சான்றுப் பொருட்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை எனவும் 22 ஆம் இலக்க சாட்சியாளரான தடயவியல் பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர் கூறியுள்ளார்.

இதன்போது சான்றுப் பொருட்களை பகுப்பாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்புவதில் தாமதம் ஏற்பட்டமைக்கான காரணம் குறித்து பிரதி சொலிசிட்டர் ஜெனரல் குமார ரட்ணம் சாட்சியாரிடம் வினவினார்.

நீதிமன்றத்தில் கட்டளைகளைப் பெறும் தினம் வரையில் சான்றுப்பொருள்களை அனுப்பவில்லை என சாட்சியாளர் பதிலளித்தார்.

இதேவேளை, மேற்படி சாட்சிப் பதிவுகள் மேலும் 9 அமர்வுகளாக இடம்பெறும் என நேற்று மன்றில் தெரிவிக்கப்பட்டது.

எதிர்வரும் 17 ஆம் 18 ஆம் மற்றும் 19 ஆம் திகதிகளிலும், 24 ஆம், 25 ஆம் மற்றும் 26 ஆம் திகதிகளிலும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2 ஆம், 3 ஆம் மற்றும் 4 ஆம் திகதிகளிலும் சாட்சியங்கள் பதிவுசெய்யும் அமர்வுகள் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(ம)

## விக்கி...

(பதினெட்டாம் பக்கத் தொடர்ச்சி)

யில்லை என்றும், எனவே, அது தொடர்பாக உறுப்பினர் ஒருவர் சமர்ப்பித்த பிரேரணையைச் சபையில் எடுக்கத் தேவையில்லை என்றும் அந்தக் கடிதத்தில் கோரியிருந்தார்.

இந்த விடயத்தில் தாம் ஒரு முடிவை எடுக்க முடியாது என்று குறிப்பிட்ட அவைத் தலைவர், அதனால் சம்பந்தப்பட்ட பிரேரணை, அதை ஒட்டி முதல்வர் தமக்கு அனுப்பிய கடிதம் ஆகியவற்றை உரிய தீர்மானம் எடுப்பதற்கு வசதியாக சகல உறுப்பினர்களுக்கும் அனுப்பிவைத்தார்.

இந்தப் பின்புலத்திலேயே வடக்கு மாகாண சபையின் நிகழ்ச்சி ஒழுங்குக் குழு நேற்றுக் காலை கூடியது.

முதல்வர் விக்கி – சம்பந்தன் இடையே சந்திப்பும், அதன் மூலம் இணங்கிச் செயற்படக் கூடிய வாய்ப்புகளும் இருப்பதால் மேற்படி பரஞ்சோதியின் தெரிவுக்குழு தொடர்பான பிரேரணையைச் சபையில் இந்தத் தடவை எடுக்காமல் ஒத்திவைக்கலாம் என்றும், அதேசமயம், சம்பந்தனுடனான சந்திப்பு மற்றும் இணக்க ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட முன்னர் முதல் வரும் தம்பாட்டில் விசாரணைக் குழுக்களை அறிவித்துவிடாமல் அமைதி பேணவேண்டும் என்ற உறுதிமொழியை முதல்வரிடம் இருந்து பெற்றுக் கொள்ளுதல் அவசியம் என்றும் அக் கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது.

மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் இதற்கான தொடர்பாளராகச் செயற்பட்டு இரு தரப்புகளுக்கு இடையில் சுமுக நிலைமையை உறுதிப்படுத்த தீவிரமாகச் செயற்பட்டார்.

இதேசமயம் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு, கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நேற்றுக் காலை கூடியபோதும், இதே போன்று வடக்கு மாகாண சபையில் ஆளும் தரப்புகளுக்கு இடையிலான – கன்னை பிரிந்து மோதுகின்ற – முயற்சிப் போக்கும் கைவிடப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

இதனிடையே மாகாண சபையில் ஆளும்தரப்பிடையே தமக்கு ஆதரவு வழங்கும் 14 உறுப்பினர்களையும் அழைத்து நேற்று மாலை முதல்வர் தனியாகக் கூட்டம் ஒன்றை நடத்தினார். அங்கும் பிணக்கின்றி இணங்கிப் போகும் வற்புறுத்தலே பல தரப்பினாலும் முன்வைக்கப்பட்டன.

அடுத்த கூட்டத்தை ஆளும் தரப்பின் முழு அங்கத்தவர்களையும் – முப்பது பேரையும் – அழைத்து ஒன்றிணைக்கும் வகையில் முன்னெடுக்க வேண்டும் என்றும் இன்றைய கூட்டத்தில் வற்புறுத்தப்பட்டது.

இத்தகைய ஓர் இணக்க நிலைமை நேற்று மாலை காணப்பட்டமையால் இன்றைய மாகாண சபைக் கூட்டம் கடந்த கூட்டத்தைப் போன்று அமைதியாகப் போகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

திருமதி அனந்தி சசிதரனும், சர்வேஸ்வரனும் இன்றைய கூட்டத்தில் முதல் தடவையாக அமைச்சர்களாகப் பங்குபற்றுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ)

### கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

## தமிழ் மன்றத்தினரின் ஏற்பாட்டில் இன்றும் நாளையும் முத்தமிழ் விழா

கோப்பாய், ஜுலை 06

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நடத்தும் முத்தமிழ் விழா இன்று வியாழனும், நாளை வெள்ளியும் நடைபெறும். இன்று முதல் நாள் நாடக அரங்கும், நாளை இரண்டாம் நாள் இயல் இசை அரங்கும் இடம்பெறும். இரு நாள்களும் காலை 8.30 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

**முதலாம் நாள்**

இன்று நாடக அரங்கு, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக முதுநிலை விரிவுரையாளர் எவ்.ரி.அல்பிரட்டும் சிறப்பு விருந்தினராக தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் க.திலகநாதனும் கலந்து கொள்வர்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் ஆசியுரையையும், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதுநிலை விரிவுரையாளர் வி.எஸ். குணசீலன் வாழ்த்துரையும் வழங்குவர்.

தொடர்ந்து நாடக அளிக்கைகள்: 'காவேரி இல்லம்', 'தமிழ் மணம்', 'ராதா இல்லம்', 'எப்போது விடியல்', 'அருணா இல்லம்' 'விஷப் பாம்புகள்', 'சுவர்ணா இல்லம்' 'சிந்தனை செய் மனமே'!

ஊமை ஆற்றுகை: நீரைச் சேமிப்போம் – ஆரம்பக்கல்வி – G, அக்கறை – உடற்கல்வி, தப்பி வந்த தாடி ஆடு (சிறுவர் நாடகம்) ஆரம்பக் கல்வி – B.

**இரண்டாம் நாள்**

நாளை வெள்ளிக்கிழமை இயல் இசை அரங்கு நிகழ்வு கோப்பாய் கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் தலைமையில் இடம்பெறும்.

முதன்மை விருந்தினர்கள் பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ், சிறப்பு விருந்தினராக யாழ். வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் தி.தயாபரன்.

சர்வமதப் பிரார்த்தனை, பண்பாட்டு ஊர்வலம் ஆகியவற்றைத் தொடர்ந்து விரிவுரையாளர் கழகத் தலைவர் செல்வி எஸ்.செல்வமலர் வாழ்த்துரை வழங்குவார்.

மதிய இடைவேளைக்குப் பின் கொழுந்து நடனம், பட்டிமன்றம், இசை நாடகம் போன்றவை இடம்பெறும். (இ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மாறி மாறி கால்வாரும் அரசியல்

நல்லாட்சி அரசின் நகர்வின்மைக்கான உண்மையான சூக்குமம் அம்பலமாகியிருக்கின்றது.

இரண்டு பிரதான கட்சிகளும் ஒன்றிணைந்து இந்த அரசை அமைத்துள்ள போதிலும் அவற்றுக்கு இடையில் குறைந்த பட்சம் பொது வேலைத் திட்ட விவகாரத்தில் கூட ஓர் ஒத்திசைவு இல்லை.

அதனால்தான் விடயங்கள் ஒப்பேறாமல் இழுபடுகின்றன.

இரண்டு கட்சிகளுமே தற்போது கைக்குக் கிடைத்த ஆட்சி அதிகாரச் சுவையைக் கைவிடாமல் அதைச் சுவைத்தபடியே எதிர் காலத்தில் தமது கட்சி மட்டுமே ஆட்சியில் நீடிக்க வழி செய்யும் வேலைத் திட்டத்தையே முன்னெடுத்து வருகின்றன என்பதும் -

அதனால் பொதுவேலைத் திட்டத்தின் கீழ் தாம் முன்னெடுப்பதற்கு சூளுரைத்த - வாக்குறுதியளித்த - பல விடயங்களைக் கவனிக்காமல் அவை காற்றில் பறக்க விட்டிருக்கின்றன என்பதும் - இப்போது தெளிவாகக் கண்கூடாகியிருக்கின்றது.

மஹிந்த ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்பி இரண்டரை வருடங்கள் கடந்தாகி விட்டன. நல்லாட்சி அரசு நிறுவியும் இரண்டு வருடங்களாகப் போகின்றன.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழித்தல், இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணுதல், தேர்தல் முறைகளைச் சீர்திருத்தம் செய்தல் என்பன உட்பட பல முக்கிய விடயங்களை உள்ளடக்கியதான புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் என்று உறுதியளித்தே இந்த அரசு ஆட்சிக்கு வந்தது. அதுவும் இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து கூட்டு அரசு நிறுவி இந்தக் காரியங்களை முன்னெடுக்கும் என்று தேர்தலுக்கு முன்னரே மக்களுக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டுமிருந்தது.

கூட்டு அரசு நிறுவப்பட்டது. இரண்டு தரப்பினருக்குமே அதிகாரங்களை ருசி பார்க்கும் பதவிகள் தாராளமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டன. ஆனால், அதற்கு மேல் எதுவும் உருப்படியாக நடந்ததாக இல்லை.

எந்த இலக்கை பிரதானமான விடயமாகக் கொண்டு ஆட்சிக்கு வந்தார்களோ அதனை சட்டுப்புட்டு என்று செய்திருந்தால் விவகாரம் முன்னேறியிருக்கும். ஆட்சிக்கு வந்த கையோடு, பதவிக் கதிரைக்கு சூடேற்றி அதிகாரங்களைச் சுகமாக அனுபவிக்கின்றமையை ஒருபுறம் பார்த்துக்கொண்டு, மறுபுறம் பிரதான இலக்கைக் கவனித்திருந்தால் இன்று புதிய அரசமைப்பு நடைமுறைக்கு வந்திருக்கும். இவர்கள் காலத்தை இழுத்தடிக்க மறுபுறம் பேரினவாதிகள் மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியமை போன்று எழுச்சி கொண்டுள்ளனர்.

இந்த ஆட்சியாளர்கள் பதவிக்கு வந்த சமயம் அளித்த வாக்குறுதிகளுள் ஒன்று - கடந்த அரசின் காலத்தில் இழைக்கப்பட்ட ஊழல், மோசடி, அதிகாரத் துஷ்பியோகம் மற்றும் அடிப்படை மனித உரிமை மீறல்கள் போன்றவற்றைக் கண்டுபிடித்து, அவற்றின் சூத்திரதாரிகளைச் சட்டத்தின் முன் நிறுத்துவது என்பதாகும்.

அதுவும் கூட நடக்கவில்லை. அதற்கான காரணத்தை நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் வெளிப்படையாகவே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன போட்டுடைத்திருக்கின்றார் என்ற செய்தி வெளியாகியுள்ளது.

குற்றங்களும், குற்றவாளிகளும் கண்டுபிடிக்கப்பட்டு விட்டனர். ஆனால், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாதவாறு அரசுத் தலைமைப்பீடத்தில் சில சக்திகள் தடுத்து வருகின்றன என்ற உண்மையைப் பட்டவர்த்தனமாக அமைச்சர்கள் முன்னிலையில் அம்பலப்படுத்தியிருக்கின்றார் ஜனாதிபதி.

மற்றைய கட்சியான சு.க. பலமடைந்து விட அனுமதிக்கக் கூடாது என்பதற்காக சு.கவுக்குள் இருக்கும் மஹிந்த அணியைக் காப்பாற்றி, வளர்த்து, தூண்டிவிடுகிறது ஐ.தே.கட்சி என்பதுதான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமது அமைச்சரவைக் கூட்டத்தில் வெளியிட்ட குற்றச்சாட்டின் சாராம்சம்.

அதுபோலவே, மஹிந்த அணி பலமடைந்து விட இடமளிக்கக் கூடாது என்பதற்காகத்தான் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமை ஒழிப்பை இப்போது எதிர்க்கின்றது சு.க.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தப்படி இரண்டு தடவைகள் ஜனாதிபதியாகவிருந்த மஹிந்த ராஜபக்ஷ இன்னொரு ஜனாதிபதி தேர்தலில் நிற்க முடியாது. அந்தக் கட்டுப்பாடு இருக்கும் வரை அவர் ஆட்சித் தலைவராகவும் வரமுடியாது என்பது உறுதி. அப்படி அவர் ஆட்சித் தலைவராக வர இயலாது என்பது நிச்சயமாக நீடிக்கும் வரை சு.கவுக்குள் ஒரு பெரிய சக்தியாக அவரால் உருவெடுக்க முடியாது என்று சு.கவின் தற்போதைய தலைமை கருதுகின்றது. அதனால்தான் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிப்போம் என்று கூறி அதிகாரத்துக்கு வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உட்பட சு.க. தரப்பு அதனைச் செய்ய இப்போது மறுக்கின்றது.

அதேபோன்று கடந்த ஆட்சிக்காலக் குற்றங்களைக் கண்டுபிடித்து, விசாரித்து, அம்பலப்படுத்தி, சூத்திரதாரிகளை சட்டத்தின் முன் நிறுத்துவோம் என்று சூளுரைத்த ஐ.தே.கட்சியோ நல்லாட்சி அரசில் தனது பங்காளிக் கட்சியான சு.க. பலமடைந்து விடக் கூடாது என்பதற்காக அதற்குள் இருக்கும் மாற்றுத் தரப்பை, சட்டத்தின் முன் காப்பாற்றி, போஷித்து ஊக்குவிக்கின்றது.

ஆட்சிக் கட்டில் இருக்கும் இரு பிரதான கட்சிகளும் தத்தமது கட்சி நலன் மட்டும் பேணமுயல்வதால் நல்லிணக்கம், புரிந்துணர்வு, நிரந்தரத் தீர்வையும் உள்ளடக்கிய புதிய அரசமைப்பை உருவாக்கல் என்பன எல்லாமே பகல் கனவாய் மாறி வருகின்றன.

## பலவந்த காணாமல் போதல்களுக்கு எதிரான சர்வதேச பிரகடனச் சட்டத்தை இரத்துச் செய்ய வேண்டும்

### கூட்டு எதிரணியின் தலைவர் வலியுறுத்து



பலவந்த காணாமல் போதல்களுக்கு எதிரான சர்வதேச பிரகடனத்தின் அடிப்படையிலான புதிய சட்டம் மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் படையதிகாரிகள் உள்ளிட்டோரைப் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளிவிடும் என்று கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளு மன்றக் குழுத் தலைவர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பலவந்த காணாமல் போதல்களிலிருந்து அனைவரையும் பாதுகாக்கும் சர்வதேச பிரகடனச் சட்டத்தை தற்காலிக அடிப்படையில் அன்றி முழுவதுமாக ரத்துச் செய்யவேண்டும்.

இந்தப் பிரகடனம் தொடர்பான சட்டம் இலங்கை நாடாளு மன்றில் சமர்ப்பிக்க எவ்வித நியாயமும் கிடையாது.

வெளிவிவகார அமைச்சும் அதன் அதிகாரிகளும் இந்த சட்டத்தில் கையொப்பமிட்டு பெரிய தவறிழைத்துள்ளனர்.

எளிமையாகக் கூறினால் இந்த சட்டம் நிறைவேற்றப் பட்டால் வெளிநாடு ஒன்றுக்கு இந்த நாட்டின் பிரஜையை ஏதேனும் ஓர் குற்றச்சாட்டின் அடிப்படை யில் அந்தநாட்டு நீதிமன்றில் முன்னிலைப் படுத்துமாறு இலங்கை அரசிடம் கோரிக்கை விடுக்க முடியும்.

அவ்வாறான கோரிக்கை விடுக்கப்பட்டால் அந்த நபரை அந்த நாட்டிடம் இலங்கை ஒப் படைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். - என்றார். (எ)

## சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்ட பிளவால் கீழ்மட்ட உறுப்பினர்கள் அசௌகரியம்

### கட்சியின் பொதுச்செயலர் துமிந்த விசனம்



கொழும்பு, ஜூலை 06

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் காணப்படும் அரசியல் ரீதியான பிளவு காரணமாக கட்சியின் கீழ் மட்ட உறுப்பினர்களே அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர் என்று சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரான அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

எப்பாவல பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் பேசியபோதே அவர்மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் செயற்பாடுகள் காரணமாக சுதந்திரக் கட்சியினர் அசௌகரியத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையை மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் ஒப்படைத்து விட்டு தற்போது அதனைக் கொண்டு நடத்த விடாமல் இடையூறுகளை ஏற்படுத்தி கட்சியைப் பிளவுபடுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்.

இதன் காரணமாக கட்சியின் அடிமட்ட தொண்டர்கள் பெரும் பாதிப்புகளை எதிர் நோக்கி வருகின்றனர்.- என்றார். (எ)

## தீவிரமாகப் பரவும் டெங்கால் பாடசாலைச் சீருடையில் மாற்றம்

### கல்வி அமைச்சு அதிரடி நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 06

நாட்டில் டெங்கு நோய் மிகவும் தீவிரமாக பரவி வரும் நிலையில், பாடசாலை மாணவர்கள் பாதுகாப்பான உடைகளை அணிந்து பாடசாலைக்குச் செல்லலாம் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக கல்வி அமைச்சு நேற்று விசேட சுற்றிக்கை ஒன்றை வெளியிட்டு இவ்விடயத்தை குறிப்பிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

டெங்கு நுளம்புகள் தம்மை தாக்காதவாறு உடம்பை முழுமையாக மறைக்கும் அல்லது பாதுகாப்பான ஆடைகளை அணியுமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

டெங்கு நோய் தாக்கத்தால் வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 600இற்கும் அதிக மானவர்கள் உயிரிழந்துள்ளனர். அத்துடன் அவர்களுள் பாடசாலை மாணவர்களும் கணிசமான அளவு உள்ளடங்கியுள்ளனர்.-என்றுள்ளது.

இதேவேளை, ஓரிரு தினங்களுக்கு முன்னர் பதுளை மாவட்டத்தில் பாடசாலை மாணவர்கள் இருவர் டெங்கு தாக்கத்தால் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (எ)

### உயர் குருதியமுக்கத்தினை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்



- உடல் நிறையைக் குறைத்தல்
- தினமும் உடற்பயிற்சி செய்தல்
- சிறு தூரங்களுக்குச் சைக்கிள் ஓடுவதை வழக்கப்படுத்திக் கொள்ளுதல்.
- புகைப் பிடிக்கும் பழக்கத்தைத் தவிர்த்தல்

தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.

### நாளை

07.07.2017
வெள்ளிக்கிழமை

நட்சத்திரம் : கேட்டை பி.ப 01.02 வரை
திதி : திரயோதசி காலை 6.37 வரை

சுபநேரம் : 5.58 – 7.28 வரை
இராகுகாலம் : 10.28 – 11.58 வரை

# மனோ–சுமந்திரன் கடும் வாக்குவாதம்!

## வழிகாட்டல் குழுக் கூட்டம் இடையில் நின்றது




கொழும்பு, ஜூலை 06
நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடந்த அரசமைப்பு கவுன்சிலின் வழிகாட்டல் குழுக் கூட்டத்தில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்கும், அமைச்சர் மனோ கணேசனுக்கும் இடையில் கடுமையான வாக்குவாதம் இடம்பெற்றுள்ளது.

இந்த வாக்குவாதத்தை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலையிட்டு அமைதிப்படுத்திய போதிலும், வழிகாட்டல் குழுவின் கூட்டம் இடையிலேயே நிறுத்தப்பட்டுள்ளது.

அரசமைப்பு திருத்தம் தொடர்பான இடைக்கால அறிக்கை குறித்து விவாதிப்பதற்காக வழிகாட்டல் குழுவின் கூட்டம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற வளாகத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம் பெற்றது.

இதன்போதே, அரசமைப்பு திருத்த முன்மொழிவுக்கு தமிழ்க் கட்சிகளின் இணங்கப்பாடு தொடர்பான விவகாரத்தில்,நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கும், அமைச்சர் மனோ கணேசனுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

தமிழ்க் கட்சிகள் அரசமைப்பு சீர்திருத்தங்களுக்கு ஒப்புதல் அளித்து விட்டன என அமைச்சர் மனோ கணேசன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார் என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் குற்றம்சாட்டியுள்ளார்.

அதனை நிராகரித்த மனோ கணேசன், முன்மொழியப்பட்ட திருத்தங்களை தமிழ்க் கட்சிகள் எதிர்க்கவில்லை என்று கூறுவதில் தவறு இல்லை என்று வாதிட்டுள்ளார்.

இந்த வாக்குவாதம் நீடித்த போது, இருவரையும் அமைதிப்படுத்த தலையீடு செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்த விவகாரத்தைக் கூட்ட அறைக்கு வெளியே கலந்துரையாடி தீர்த்துக் கொள்ளுமாறும் ஆலோசனை கூறியுள்ளார்.

இந்த வாக்குவாதத்தின் விளைவாக, வழிகாட்டல் குழுவின்கூட்டம் நேற்றுமுன்தினம் இடையில் நிறுத் தப்பட்டது என நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இடைக்கால அறிக்கையை இறுதிப்படுத்துவதற்காக, வழிகாட்டல் குழு இன்றும் கூட வுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# காணி, பொலிஸ் அதிகாரங்கள் மலையகத்துக்கும் வேண்டும்!

## தொழிலாளர் காங்கிரஸ் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 06
மலையக பெருந்தோட்டப் பகுதிகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கோரியுள்ளது.

உத்தேச அரசமைப்புத் திருத்தங்களின் ஊடாக மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளுக்கும் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் எனக் கோரியுள்ளன.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் முத்து சிவலிங்கம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

வடக்கு, கிழக்கை ஒன்றிணைப்பதற்கும் காணி அதிகாரங்களை வழங்குவதற்கும் ஆதரவளிக்கப்படும் எனவும், பொலிஸ் அதிகாரங்கள் மாகாணத்துக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார் எனக் கொழும்பு நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அரசமைப்புச்சபை அமர்வுகளிலா அல்லது வெறும் சந்தர்ப்பத்திலா இவ்வாறு முத்து சிவலிங்கம் கோரினார் என்பது பற்றிய விவரங்கள் வெளியிடப்படவில்லை.

இதேவேளை, அரசமைப்புச் சபையின் இணைக்குழுவுக்கு நான்கு சிறு கட்சிகள் தங்களது யோசனைத் திட்டங்களை முன்வைத்துள்ளன.

ஜனநாயகமக்கள்முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஈ.பி.டி.பி மற்றும் அகில இலங்கை மக்கள் காங் கிரஸ் ஆகிய கட்சிகள் இவ்வாறு பரிந்துரைகளை முன்வைத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

(க)

# குப்பையுடன் கொட்டப்படும் மனித உடல் அவயவங்கள்!

## நிராகரிக்கிறார் அமைச்சர் பைசல் முஸ்தபா

கொழும்பு, ஜூலை 06
குப்பைகளுடன் மனித உடல் அவயவங்களும் முத்துராஜவெலயில் கொட்டப்படுகின்றன எனத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் பைசல் முஸ்தபா நிராகரித்துள்ளார்.

நாடாளுமன்றம்நேற்றுமுன்தினம் பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது.

தினப்பணிகள் முடிவடைந்த பின்னர் நிலையியல் கட்டளையின் 23/2 இன் கீழ் குப்பைப் பிரச்சினை தொடர்பில் விசேட கூற்று ஒன்றை தினேஷ் குணவர்தன விடுத்திருந்தார்.

கழிவுகள் வீதிகளில் கொட்டப்பட்டுள்ளன. அவை அகற்றப்படவில்லை. இதனால், சூழலுக்கும் சுகாதாரத்துக்கும் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

டெங்கு நோயும் தீவிரமடைந்துள்ளது. குறிப்பாக, பிண அறைகளிலிருந்து வீசப்பட்டுள்ள மனித உடல் அவயவங்களும் முத்துராஜவெலயில் கொட்டப்படுகின்றன என மக்கள் தெரிவிக்கின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் அந்தத் தகவலை நிராகரித்தமையுடன், குப்பை பிரச்சினையை வைத்து சிலர் அரசியல் தேட முயற்சிக்கின்றனர் எனவும் விசனம் வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, முத்துராஜவெல குப்பைப் பிரச்சினை தொடர்பில் மஹிந்த அணியிலுள்ள கம்பஹா மாவட்ட எம்.பிக்கள், அமைச்சர் பைசல் முஸ்தபாவிடம் கேள்விகளை எழுப்ப முற்பட்டனர்.

எனினும், அவர்களுக்கான வாய்ப்பு வழங்கப்படவில்லை. இதனால், சபையில் சிறிது நேரம் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

(க)

# மஹிந்தவுடன் கூட்டமைப்பினர் பேசியிருந்தால் தமிழருக்கு நியாயமான தீர்வு கிடைத்திருக்கும்!

## நாமல் எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 06
மஹிந்தவுக்கு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் இருந்த போது சிங்கள மக்களின் பெரும் பான்மை ஆதரவு இருந்தபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மஹிந்தவுடன் பேசியிருந்தால் தமிழர்களுக்கு நியாயமான அரசியல் தீர்வொன்று கிடைத்திருக்கும்.

அவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினையை போலியாக அணுகியமையால் தான் பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை.

இவ்வாறு மஹிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

புதிய கூட்டமைப்பின் ஊடாக நாம் தமிழ், முஸ்லிம் மக்களின் உள்ளங்களை வெல்வதற்கு அவர்களை எம் பக்கம் இணைத்துப் போடுவதற்கு விசேட வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்துள்ளோம்.

வடக்கு, கிழக்கில் இளம் தலைவர்களை உருவாக்குவதற்குத் திட்டமிட்டுள்ளோம். அவ்வாறானவர்களை நாம் அடையாளம் கண்டுள்ளோம். எதிர்காலத்தில் அவர்கள் யார் என்று சொல்வோம்.

எமக்கு சில அரசியல் தலைவர்களுடன் மாத்திரம்தான் பிரச்சினை உண்டு. அவர்கள் எமது கொள்கைகளுடன் ஒத்துப்போக மறுக்கின்றனர்.

உதாரணத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. எமது ஆட்சியில் அவர்களால் மிக இலகுவாக வந்து மஹிந்த வுடன் பேசும் வாய்ப்பிருந்தது.

தமிழர்களின் பிரச்சினைகளை இலகுவாகத் தீர்த்துக் கொள்ளும் வாய்ப்பிருந்தது. தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்று அவர்கள் விரும்பவில்லை.

அப்படி இருந்திருந்தால் மஹிந்தவுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் நாடாளு மன்றில் இருந்த போது - சிங்கள மக்களின் பெரும்பான்மை ஆதரவு இருந்த போது - மஹிந்தவுடன் பேசி தமிழர்களுக்கான தீர்வைப் பெற்றிருப்பார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# மகாநாயக்க தேரர்களை ஜனாதிபதி சந்திக்கிறார்!

கொழும்பு, ஜூலை 06
ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேனவுக்கும், பௌத்த மகாநாயக்க தேரர்களுக்கும் இடையில் விசேட சந்திப்பு ஒன்று இடம்பெறவுள்ளது.

இந்த விசேட சந்திப்பு அஸ்கிரி விஹாரையில் இன்றைய தினம் இடம் பெறவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தேச அரசமைப்பு, நாடு எதிர்நோக்கி வரும் ஏனைய முக்கிய பிரச்சினைகள் தொடர்பாகவும் சந்திப்பில் கலந்துரையாடப் படவுள்ளது.

இதேவேளை, நேற்று முன்தினம் பௌத்த பீடங்களின் பிரதம மகாநாயக்க தேரர்கள் கூடி நாட்டின் முக்கிய விடயங்கள் குறித்து ஆராய்ந்திருந்தனர்.

குறிப்பாக, புதிய அரசமைப்பு திருத்தங்கள் உள்ளிட்ட விடயங்கள் குறித்து பேச்சு நடத்தப்பட்டுள்ளன.

(க)

# பொலித்தீனை முற்றாக தடை செய்வது குறித்து அரசு கவனம்!

கொழும்பு, ஜூலை 06
பொலித்தீன் வகைகளை முற்றாகத் தடை செய்வது தொடர்பாக அரசு கவனம் செலுத்தி வருகின்றது.

கழிவுகளை அகற்றும் போது பொலித்தீன் காரணமாக பல்வேறு பிரச்சினைகள் எழுகின்றன எனவும் நீர் அடித்துச் செல்லும் பகுதிகளில் பெரும் பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன், பதிலீடாக வேறு பொருள்களை அறிமுகம் செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## தோட்டாவுடன் கைதானவர் விளக்கமறியலில்

துப்பாக்கித் தோட்டா மற்றும் துப்பாக்கிக் குழல் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 22வயதுடைய ஒருவரை, எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோண மலை நீதிமன்ற நீதிவான் எம்.எச்.எம்.ஹம்ஸா, நேற்றுமுன்தினம் உத்தர விட்டார்.

துப்பக்கித் தோட்டா வையும் துப்பாக்கிக் குழ லையும் அந்தச் சந்தேக நபர்மறைத்து வைத்திருக் கின்றார் என பொலிஸா ருக்குத்தகவல்கிடைத்தது.

இதனை அடுத்து, சந்தேகநபரின்வீட்டில்திங் கட்கிழமை இரவுசோதனை மேற்கொண்டபோது, தோட்டா ஒன்றும் குழல் ஒன்றும்மீட்கப்பட்டன.அத் துடன் சந்தேக நபரும் கைதுசெய்யப்பட்டார்.(எ)

# இனங்களுக்கு இடையே குழப்பங்களை ஏற்படுத்த அரசு ஒருபோதும் இடமளியாது

### மட்டக்களப்பில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



மட்டக்களப்பு, ஜூலை 06

நாட்டில் இனவாதத் தைத் தூண்டி, இனங்க ளுக்கு இடையில் குழப் பங்களை ஏற்படுத்த அரசு ஒருபோதும் அனுமதிக் காது என்று பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி யின் மட்டக்களப்பு மாவட்ட முக்கியஸ்தர் களுடனான கலந்துரை யாடல், காத்தான்குடி பள்ளிவாசல்கள்முஸ்லிம் நிறுவனங்களின் சம் மேளன மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறி னார்.

ஐ.தே.கவின் மட்டக் களப்பு மாவட்ட இணைப் பாளர் எம்.எஸ்.ஸாபியின் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் நடை பெற்றது.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டில் சில இன நீதி யான குழுக்கள், இனவா தத்தைத் தூண்டி இன மோதலை உருவாக்க முயற்சிக்கின்றன.

அதற்குயாரும்துணை போகக் கூடாது என்பது டன், இந்த நாட்டை இன, மத, மொழி பேதமின்றி அனைவரும்ஒன்றுபட்டு கட்டியெழுப்ப வேண் டும். அதற்காகவே இந்த நல்லாட்சி அரசு உரு வாக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சக்திகள் குழப்பத்தை ஏற்படுத்தி, இந்த நாட்டைக் குழப்ப நிலைமைக்குக்கொண்டு செல்ல முயற்சித்தபோது, தேசிய அரசு உருவாக்கப் பட்டது.

கடந்த 30 வருடகால போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் அபிவி ருத்தி செய்யப்பட்டு வருகின்றன. அவ் வகை யில், மட்டக்களப்பிலும் அபிவிருத்தி நடவடிக் கைகள் முன்னெடுக்கப் படுகின்றன.

மேலும், மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த ஐக்கிய தேசியக் கட்சி அங்கத்தவர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் முன் வைத்துள்ள வேண்டு கோள்களைப் பிரதமரும் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்குக் கொண்டு செல்வேன்.-என்றார். (எ)

## கிழக்கு கலை இலக்கிய பெருவிழா கல்முனையில்

கிழக்குமாகாணக்கல்வி மற்றும் பண்பாட்டலு வல்கள் அமைச்சு நடத் தும் 2017ஆம் ஆண்டுக் கான அரச கலை இலக் கியப் பெருவிழா, இம் முறை கல்முனை நகரில் நடைபெறும் என்று மாகாணக் கல்வி அமைச் சர்எஸ். தண்டாயுதபாணி தெரிவித்தார்.

இந்த விழாவை எதிர் வரும் ஓகஸ்ட்டில் நடத் துவதற்குத் திட்டமிடப் பட்டுள்ளது என்று அவர் மேலும் கூறினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

விழா தொடர்பான கலந்துரையாடல், கல் முனை உவெஸ்லி உயர் தரப்பாடசாலையில்நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை நடை பெற்றது.

கல்முனை நகரில் தமிழ் -முஸ்லிம் மக்கள் கலந்து வாழ்கின்றனர். எனவே, இங்குள்ள மக்க ளினது பண்பாட்டு, கலா சார அம்சங்கள் இந்த விழா வில்பேசப்படவேண்டும்.

மூன்று நாள்கள்; தொடர்ச்சியாக நடை பெறும் இந்த விழாவில் ஊர்வலம், ஆய்வரங்கு, கவியரங்கு, கலை நிகழ்ச் சிகள் போன்றன நடை பெறவுள்ளன.

அத்துடன், இலக்கியத் துக்குப்பங்களிப்புச்செய்த கலைஞர்கள் பாராட்டப் பட்டு வித்தகர் விருது, இளம் கலைஞர் விருது, சிறந்த புத்தகத்துக்கான பரிசு என்பன வழங்கப் படவுள்ளன. மேலும் அரச உத்தியோகத்தர்களுக் கானபோட்டிகளில்வெற்றி பெற்றவர்களுக்கு விருது கள் வழங்கப்படவுள் ளன.-என்றார். (எ)



திருக்கொண்டியடிமடு பகுதியிலிருந்து கொழும்பு நோக்கிச் செல்லும் ஏ 11 வீதியின் 119 தொடக்கம் 225 மைல்கல் வரையான பகுதியை அண்டிய பிரதேசங்கள் நேற்றுமுன்தினம் கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் சுகாதாரப் பகுதியினரால் துப்புரவு செய்யப்பட்டன.

## 10 பேருக்கு நீரிறைக்கும் இயந்திரங்கள்

வாகரை, மாங்கேணியில் இயற்கை முறை விவசாயத் தில் ஈடுபடும் 10 பேருக்கு, சுமார் 5லட்சம் ரூபா பெறுமதி யான நீரிறைக்கும் இயந்திரங் கள் நேற்று வழங்கப்பட்டுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி சந் திரிகா பண்டாரநாயக்க குமார துங்கவைத் தலைவியாகக் கொண்ட தேசிய ஒருமைப் பாட்டுக்கும் நல்லிணக்கத்துக் குமான அலுவலகத்தின் நிதி ஒதுக்கீட்டில், இவை வழங்கப் பட்டுள்ளன.

மாங்கேணியில் நீண்ட காலமாக கடற்றொழிலில் ஈடு பட்டு வாழ்வாதாரத்தை இழந்த 23 பேர், இயற்கை முறை விவசாயத்தில் ஈடுபட்டு வரு கின்றனர். ஏனைய 13 பேருக் கும்நீரிறைக்கும்இயந்திரங்கள் விரைவில் வழங்கப்படும்என்று மட்டக்களப்புமாவட்டத்திட்டமி டல் பணிப்பாளர் ஆர்.நெடுஞ் செழியன் தெரிவித்தார். (எ)

# விசேட தேவையுடையோருக்கான அடிப்படை உரிமையை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முடியும்

### மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மட்டு. பிராந்திய இணைப்பாளர் கருத்து



விசேட தேவையுடை யோருக்கான பாதுகாப்பு அடிப்படை உரிமையை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முடி யும் என்று மனித உரிமை கள் ஆணைக்குழுவின் மட்டக்களப்பு பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தெரிவித்தார்.

இலங்கை மனித உரி மைகள் ஆணைக்குழு வால் ஏற்பாடு செய்யப் பட்ட விசேட தேவையு டையோரின் உரிமைகள் தொடர்பான செயலமர்வு, மட்டக்களப்பு ஹமிட் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு:-

சர்வதேச சமூகத்தின் நன்மதிப்பைப் பெற்றுக் கொள்வதற்கும் மக்களுக் குச் சேவை செய்வதற் குமான வழிகளில் ஒன்று, சர்வதேச மனித உரிமை கள் சாசனத்தைப் பின் பற்றி அதன்மூலம் உரி மைகளை மக்களுக்கு உறுதிப்படுத்துவதாகும்.

இதுசகலமக்களுக்கும் குறிப்பாக, விசேடதேவை யுடையோருக்கும் எவ் வகையிலும் பாதிக்க முடி யாத உள்ளார்ந்த உரிமை கள் உள்ளன என்பதைத் தெரிவிப்பதை அடிப்ப டையாகக் கொண்டதாகும்.

விசேட தேவையுடை யோருக்குப் பாதுகாப்பு அடிப்படை உரிமை உள் ளது என்பதால், மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.

ஒரு நாட்டில் ஜன நாயகத்தைப் பாதுகாத் தல், பிரஜைகளின்பொது நலனை விருத்தி செய் தல், சமூக நீதியை நிலை நாட்டுதல்என்பவற்றுக்கு மனித உரிமைகள் அத்தி யவசியமானவை. மனித உரிமைகள் தொடர்பான எண்ணக்கரு, எமது நாகரிகத்தின் உன்னத மான சாதனை எனலாம்.

ஒவ்வொரு மனிதனும் மனித உரிமையையும் சட்டத்தையும் கற்றறிவது டன், இதன் மதிப்பை மேம்படுத்திப் பாதுகாக்க வேண்டும். நாட்டின் அதி யுயர் சட்டமாகிய அர சமைப்பினுள் அல்லது விசேட சட்டங்களைக் கொண்டுவந்து அவற்றி னுள் மனித உரிமைகள் சாசனத்திலுள்ள விடயங் களை உள்ளடக்கி சட்ட மாக்குவதன் மூலமே உரி மைகளை நாம் சட்ட ரீதி யாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

நாட்டில் 1972ஆம் ஆண்டில் கொண்டுவரப் பட்ட அரசமைப்பிலும் அதன் பின்னர், 1978ஆம் ஆண்டில் கொண்டுவரப் பட்ட அரசமைப்பிலும் அடிப்படை உரிமைகள் என்ற வகையில் உரிமை கள் அறிமுகம் செய் யப்பட்டுள்ளன. எனவே, எல்லா மனித உரிமைக ளும் அடிப்படை உரிமை களல்ல. ஆனால், அடிப் படை உரிமைகள் எல் லாம் மனித உரிமைகளா கும்.

அரசமைப்பின் மூன் றாவது அத்தியாயத்தில், அடிப்படை உரிமைகள் பற்றிக்கூறப்பட்டுள்ளன. உத்தேச அரசமைப்பு சீர் திருத்தத்திலும் இன்னும் பல அடிப்படை உரிமை கள் உள்ளீர்க்கப்பட இருக் கின்றன - என்றார். (எ)

# புலிகள் தலைதூக்கத் தொடங்கியுள்ளனர்; மைத்திரி அரசைக் கவிழ்த்தே ஆகவேண்டும்!

## விமல் வீரவன்ஸ கூறுகிறார்



கொழும்பு, ஜூலை 06

புலிகள் மெல்ல மெல்லத் தலைதூக்கத் தொடங்கியுள்ளனர் எனவும் மைத்திரிக்கு வாக்களித்த மக்கள் இதை உணரப்போகின்றனர் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தாமதிக்காமல் உடனே மைத்திரி அரசைக் கவிழ்க்க வேண்டும். இல்லாவிட்டால் இந்த நாட்டைக் காப்பாற்ற முடியாது.

புதிய அரசமைப்பின் ஊடாக சமஷ்டி, எட்கா ஒப்பந்தம் கொடுக்கப்படுவதற்கு முன்னர் தாமதிக்காமல் உடனே மைத்திரி அரசைக் கவிழ்க்க வேண்டும். இல்லாவிட்டால் இலங்கையைக் காப்பாற்ற முடியாது.

எமது நாட்டிலுள்ள தொழிலாளர்கள், வர்த்தகர்கள், சிறுபான்மை இன மக்கள் மற்றும் 2015 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி மைத்திரிக்கு வாக்களித்தோர் என எல்லோரும் இன்று குழப்பத்திலும் கவலையிலும் உள்ளனர்.

இந்த நாடு புதிய வழியில் பயணிக்கவேண்டும் என்று விரும்புகின்றனர். எமது ஆட்சியில் பல விடயங்களைச் செய்தோம்.

போரை முடிவுக்குக் கொண்டு வந்தோம். நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குப் பலமான அடித்தளத்தை இட்டோம்.

சர்வதேச கடன் சுமை குறைந்தது. ஒற்றையாட்சி பலப்படுத்தப்பட்டது. பயங்கரவாதத்துக்கு முடிவுகட்டி சர்வதேசத்துக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தோம்.

சர்வதேச அழுத்தங்கள் இருந்த போதும் கூட அவற்றையும் தாண்டி நாம் இந்த நாட்டை முன்னோக்கி நகர்த்தினோம். அதைவிடவும் விரிவான பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் விரும்புகின்றனர்.

தியாக மிக்க முன்னுதாரணமிக்க உணர்வுமிக்க தலைமைத்துவத்தின் தேவையை மக்கள் உணர்ந்துள்ளனர்.

ஆனால், மக்களின் விருப்பத்துக்கு மாறாக இந்த அரசு பயணிக்கின்றது. புதிய அரசமைப்பின் ஊடாக சமஷ்டி கொடுக்கப்படுவதற்கு முன் எட்கா ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுவதற்கு முன் இந்த அரசு கவிழ்க்கப்படவேண்டும்.

இல்லாவிட்டால் போன தைத்திரும்பப்பெறமுடியாமல் போய்விடும். அரசின் மோசமான பயணத்தை நிறுத்துவதற்கு நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளது.

விடுதலைப்புலிகளுக்குத் தேவையாக இருப்பது மீண்டும் தலைதூக்குவதற்குச் சாதகமான ஒரு யுகம். அதற்குத் தேவை மைத்திரி ஆட்சி என்று அப்போது நாம் கூறியபோது மக்கள் நம்பவில்லை.

சர்வதேச சதி என்று கூறிய போது அதைக் கேலியுடன் பார்த்தனர். நாம் அப்போது கூறியவை எல்லாம் இப்போது உண்மையாகிக்கொண்டு வருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# விகாரை அமைக்க போர்க்கொடி; விகாராதிபதிக்கு அச்சுறுத்தல்!

## விமல் அணி எம்.பி.குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூலை 06

நாகவிகாரையில் புத்தர் சிலை அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படுவதுடன், முல்லைத்தீவு விகாரையிலிருந்து விகாராதிபதியை வெளியேறுமாறு அழுத்தம் கொடுக்கப்படுகிறது என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வடக்கில் இந்நிலைமை மாற்றியமைக்கப்பட வேண்டும் என விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஜயந்த சமரவீர வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேருநர்களைப் பதிவு செய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

பிரபாகரனின் இரும்புப் பாத பிடிக்குள் இருந்து விடுபட்ட வடக்கு மக்களுக்கு சகல வசதிகளும் வழங்கப்பட வேண்டும்.

இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. போரால் இடம் பெயர்ந்தவர்கள் இங்கு வர வேண்டும். அவர்களின் ஜன நாயக உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

தெற்கில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ்கின்றனர். இந்த நாட்டில் எவருக்கும் எங்கு வாழும் உரிமையும் இருக்கின்றது. ஆனால், வடக்கின் நிலைமை வேறாக இருக்கின்றது. நாக விகாரையில் புத்தர் சிலை அமைப்பதற்கு எதிர்ப்பு வெளியிடப்படுகின்றது.

முல்லைத்தீவில் விகாரை அமைப்பதற்கு போர்க்கொடி தூக்கப்பட்டு, விகாராதிபதியை வெளியேறுமாறு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அங்கு இப்படியொரு நிலை இருக்கும்போது இங்கு எப்படி வேறு கோணத்தில் சிந்திப்பது? இந்நிலை மாற வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால், இந்தக் குற்றச்சாட்டை நிராகரித்த இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், ''வடக்கிலுள்ள கோயில்கள்தான் உடைக் கப்படுகின்றன'' என்று சுட்டிக்காட்டினார்.

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கும் மகாநாயக்கர்கள் எதிர்ப்பு



கொழும்பு, ஜூலை 06

தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கும் இலங்கையின் பௌத்த பீடங்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கும் முயற்சிகளைக் கைவிடவேண்டும் என அரசிடம் மூன்று பௌத்த பீடங்களின் மகாநாயக்கர்களும், சங்க சபாக்களும் கோரியுள்ளனர்.

கண்டியில் நேற்றுமுன்தினம் நடந்த கூட்டத்தில் இது தொடர்பாக ஆராயப்பட்டிருந்தது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கி, புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதையும் கைவிடுமாறும் அரசிடம் பௌத்த பீடங்கள் கோரியுள்ளன.

அதேவேளை, சியாம், அமரபுர, ராமன்ய பீடங்களின் மகா நாயக்க தேரர்களின் கையொப்பங்களுடன் கூடிய, மனுவொன்று இன்று ஜனாதிபதியிடம் சங்க சபாவைச் சேர்ந்த பௌத்த பிக்குகளால் கையளிக்கப்படவுள்ளது.

## ஆளுநர் பதவி கிடைக்காதமையால் ஏமாற்றம்

# தூதுவர் பதவியையும் துறக்கிறார் லியனகே!



கொழும்பு, ஜூலை 06

கிழக்கு மாகாண ஆளுநர் பதவியை எதிர்பார்த்திருந்த கட்டாருக்கான இலங்கைத் தூதுவர் ஏ.எஸ்.பி.லியனகே, அந்தப் பதவி கிடைக்காததையடுத்து, தனது தூதுவர் பதவியை விட்டு விலக உள்ளார்.

விரைவில் தாம் கட்டாருக்கான பதவியை விட்டு விலகுவேன் என்று அவர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் பதவி முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோகித போகொல்லாகமவுக்கு வழங்கப்பட்டமை குறித்து அவர் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

கடந்த மார்ச் மாதம் கட்டாருக்கான தூதுவராக நியமிக்கப்பட்ட ஏ.எஸ்.பி.லியனகே, தனது பதவி விலகல் தொடர்பாக அறிவிக்க இன்று அல்லது நாளை ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றை நடத்தவுள்ளார். (க)

காலைக்கதிர் Kalaikkathir



# நூல் வெளியீட்டு விழா

கோப்பாய், ஜூலை 06

ஆங்கில இலக்கிய வரலாறு (தமிழ்) நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை கோப்பாயிலுள்ள யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரியில் இடம்பெறும்.

தலைமையுரையை கைதடி நவீல்ட் பாடசாலை அதிபர் திருமதி ஆர்.வாசுகியும், வாழ்த்துரைகளை மானிப்பாய் பங்குத்தந்தை எ.எஸ்.தேவகுணாநந்தன், கல்வியியற் கல்லூ ரியின் பீடாதிபதி எஸ்.அமிர்தலிங்கம், வலம்புரி ஆசிரியர் ந.விஜயசுந்தரம் ஆகியோரும் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவும், ஆய்வுரையை கவிஞர் சோ.பத்மநாதனும், ஏற்புரையை கலாநிதி எஸ்.ஜெபநேசனும் நிகழ்த்துவர். (ச)

## தினசரி ராசி பலன் 06.07.2017

**2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆனித் திங்கள் 22 ஆம் நாள் திரயோதசித் திதி பி.இ. 5.15 மணி வரை. பின்னர் சதுர்த்தி. நட்சத்திரம்: அனுஷம் காலை 8.24 மணி வரை. பின்னர் கேட்டை. மரணயோகம் முழுவதும். ராகுகாலம்: பகல் 1.49 மணி முதல் 3.24 மணி வரை சுபநேரம்: காலை 7.30 மணி முதல் 9.00 மணி வரை. இன்று பிரதோஷ விரதம். திவசம் செய்ய வேண்டிய திதி: ஆனி மாத வளர்பிறை திரயோதசிதிதி. பிறந்த நட்சத்திர வழிபாடு: கேட்டை.**

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்** : யோசனையான நாள். செலவுகள் அதிகரிப்பால் மனக் கவலை உண்டாகும். குடும்பத்தில் கருத்துவேறுபாடுகள்உண்டாகும். தொழிலாளர்களுக்கு கடின உழைப்பால் உடலில் சோர்வு, கவலை உண்டாகும்.

**ரிஷபம்**: நன்மையான நாள். குடும்பத்தில் நல்லுறவும், அமைதியும் உண்டாகும். ஆசிரியர், மாணவர் உறவு வளர்ச்சியும், கல்வித் தேர்ச்சியும் பெறுவார்கள்.

**மிதுனம்**:ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் வளமாக இருக்கும். குடும்ப உறவுகள் சீராக இருக்கும். வியாபாரிகள் தொழில் சிறப்பும், வாழ்க்கை வசதியும் பெறுவார்கள்.

**கடகம்** : அனுகூலமான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். விட்டுப்பிரிந்த உறவுகள் மீண்டும் இணையும் வாய்ப்புண்டாகும்.

**சிம்மம்** : சலனம் மிகுந்த நாள். குடும்பத்தில் பிணக்குகள் தோன்றி மறையும். தொழில் பிரயாசை, அலைச்சல் வெளிவட்டாரத்தில் மனவேதனையான நிகழ்ச்சிகள் உண்டாகும்.

**கன்னி** : மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக இருக்கும். நண்பர்களால் ஏமாற்றமடைய நேரலாம். எதிலும் அவதானம் தேவை.

**துலாம்** : இனிமையான நாள். வருமானம் குடும்பத் தேவைகளுக்குப் போதுமானதாக இருக்கும். நண்பர்கள், உறவினர்கள் பக்கபலமாக இருப்பார்கள். பிரிந்திருந்த நெருங்கிய உறவுகள் ஒன்றுசேரும் வாய்ப்புண்டாகும்.

**விருச்சிகம்** : சுபீட்சமான நாள். வெளிநாட்டு உறவுகளிடமிருந்து விலையுயர்ந்த பொருள்கள் வந்து சேரும். வீட்டில் சுப காரியங்கள் நடந்தேறும்.

**தனுசு** : அலைச்சல் மிகுந்த நாள். பணம் பற்றாக் குறையாக இருப்பதால் கடன் வாங்க அலைவார்கள். சிலர் கொடுத்த பணத்தை மீளப் பெறுவதற்கு அலைந்து திரிவார்க்ள. பெண்கள் சுயதொழில் புரிய எண்ணி வங்கிகளின் உதவியை நாடுவார்கள்.

**மகரம்**: நன்மையான நாள். குடும்பத்தில் புரிந்துணர்வு அதிகரிக்கும். பிரிந்திருந்த உறவுகள் மீண்டும் இணைவார்கள். செய்யும் தொழிலில் உயர்வுகள் கிடைக்கும்.

**கும்பம்** : மத்திம பலன்கள் காணப்படுகின்றன. குடும்ப வாழ்வில் ஓரளவு அமைதி காணப்படும். வியாபாரிகளுக்கு லாபம் குறையும். உத்தியோகத்தர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் கரும மாற்றினாலும் நற்பெயர் கிடைப்பதரிது.

**மீனம்** : உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. தொட்டகாரியம் துலங்கும். இதுவரை நோயால் அவதிப்பட்டவர்கள், நோய்கள் நீங்கி சுகமடைவார்கள். தொழில் செய்யும் பெண்களுக்கு உயர்வுகள் கிடைக்கம்.

**சந்திராட்டமநாள்: அசுவினி பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம் ஆகியவற்றில்உதயமானோர்இனறுசுபகருமங்கள் மேற்கொள்வதைத் தவிர்க்கவும்.**

# இடம்பெயர்ந்தோர் வாக்களிக்கும் விடயத்தில்

# நெகிழ்வுப் போக்கு அவசியம்

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 06

இடம்பெயர்ந்து, வெளி மாவட்டங்களில் தங்கியிருக்கும் வாக்காளர்கள், தமது சொந்த மாவட்டத்தில் வாக்களிக்கும் உரிமை தொடர்பான விடயத்தில், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற, தேருநர்களைப் பதிவு செய்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர், நீதி அமைச்சர், தேர்தல் ஆணைக் குழு அதிகாரிகளுடன் மூன்று வருடங்களாக முன்னெடுக்கப்பட்ட பேச்சின் பயனாக, நான்கு வருடங்களுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்ட தற்காலிக ஏற்பாடாக, இந்தச் சட்டமூலம் கொண்டுவரப் பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள், வேறு மாவட்டங்களில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள், தங்களுடைய சொந்த மாவட்டங்களில், வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. எனினும், அது நான்கு வருடங்களுக்கு தற்காலிகமானதாகவே உள்ளது.

ஆகையால், இந்த விடயத்தில் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர், தன்னுடைய கடும் போக்கைக் கைவிட்டுவிட்டு, நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும்.- என்றார். (எ)

# லொத்தர் சீட்டில் மோசடி குற்றச்சாட்டு; பந்துல மீது விசாரணை அவசியம்

## அமைச்சர் ரவி கருணாநாயக்க கூறுகிறார்



கொழும்பு, ஜூலை 06

'கொவிசெத' லொத்தர் சீட்டில் இடம்பெறுவதாகக் கூறப்படும் மோசடி தொடர்பாக, ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர்பந்துலகுணவர்தனவிடம் தகவல்கள்எவையும்காணப்படுமாயின், குற்றப் புலனாய்வுப் பிரி வினரால் அவர் விசாரணை செய்யப்பட வேண்டும் என்று வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

மோசடி ஒன்று தொடர்பான தகவல்கள் காணப்படுமாயின், ஒன்றில், குற்றப் புலனாய்வுப் பிரிவிடம், பந்துல குணவர்தன எம்.பி, முறைப்பாடு செய்ய வேண் டும். இல்லையெனில், அவரை, குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரிக்க வேண்டும் என்று அமைச்சர் மேலும் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சீட்டிழுப்புத் தினம் குறிப்பிடப்படவில்லை என்று, பந்துல எம்.பியால் காட் டப்பட்ட லொத்தர் சீட்டு, உண்மையான லொத்தர் சீட்டுக் கிடையாது. மாறாக, லொத்தர் சீட்டின் வடிவமைப்பின் போது, பூர்த்தி செய்யப்படாத நிலையில் காணப்பட்ட வடிவமே அது.

இந்த விடயம் தொடர்பாக ஆராய்வதற்கு, செயற்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.-என்றார்.

இதேவேளை, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கீழேயே, தேசிய லொத்தர் சபை, அபிவிருத்தி லொத்தர் சபை ஆகியன காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ)

# ஜப்பான் வர்த்தகப் பிரதிநிதிகள் நிதி அமைச்சருடன் சந்திப்பு

## வர்த்தக நடவடிக்கைகளை இலகுபடுத்தல் குறித்து கலந்துரையாடப்பட்டது



ஜப்பான் வர்த்தக மற்றும் கைத்தொழில் சபையின் பிரதிநிதிகள் சிலர் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவைச் சந்தித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இடம் பெற்ற இந்தச் சந்திப்பின்போது இலங்கையின் முதலீடு மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்கான நடைமுறை தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள ஜப்பான் தூதுவர் கெனிச்சி சுகனுமா தலைமையில் ஜப்பான் வர்த்தகம் மற்றும் கைத்தொழில் சபை பிரதிநிதிகள் இந்தச் பேச்சில் கலந்துகொண்டனர்.

இலங்கையில்முதலீடுகளை மேற்கொள்ளும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் வரிக் கொள்கை தொடர்பிலும் அவர்கள் இதன்போது தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

முதலீடுகள்மூலம்தயாரிப்பு பொருள்களை ஏற்றுமதி செய்யும் போது விலைகள் தொடர்பில் முழுமையான உடன்படிக்கை இருப்பதால் வரிக் கொள்கைகளில் உடனடி மாற்றங்களால் பொருள்களின் ஏற்றுமதியில் தாக்கம் ஏற்படுவதற்கு வழி இருக்கின்றது எனவும் அவர்கள் இதன்போது கூறினர்.

இதனால் வரி சீர்திருத்தம் தொடர்பான விடயங்களை நடைமுறைப்படுத்தும்பொழுது ஆகக்குறைந்தது ஆறு மாதங்களுக்குமுன்னதாகமுதலீட்டாளர்களுக்குஅறிவிக்குமாறும்அமைச்சரிடம் கேட்டுக் கொண்டனர்.

ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரம் இலங்கையில் நடைமுறைப் படுத்தப்படுவதாகவும் முதலீட்டாளர்களுக்கும்ஏற்றுமதியாளர்களுக்கும் மிகவும் பொருத்தமான வரி மறுசீரமைப்பை நடைமுறைப்படுத்தப்படும் என்று நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர இதன்போது தெரிவித்தார். இந்த நிகழ்வில் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் ஆர் எச்.எஸ். சமரதுங்கவுடன் அமைச்சின் அதிகாரிகள் சிலரும் கலந்து கொண்டனர். (எ)

காலைக்கதிர்
Kalaikkathir



# புகையிலைச் செய்கைக்குத் தடை; மாற்றுப் பயிர்ச் செய்கை என்ன?



## கேள்வி எழுப்புகிறார் டக்ளஸ் எம்.பி.

கொழும்பு, ஜூலை 06

புகையிலைச் செய்கை தடை செய்யப்படுகின்ற நிலையில், புகையிலைச் செய்கையில் தற்போது ஈடுபட்டு வருகின்ற மக்களுக்கு மாற்றுப் பயிர்ச் செய்கைகள் என்ற வகையில் என்னென்ன பயிர்ச் செய்கைகள் அறிமுகப்படுத் தப்பட்டுள்ளன என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் எம்.பியுமான டக்ளஸ் தேவானந்தா கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றத்தில், நிலையியற் கட்டளையின் கீழ், நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றை விடுத்து கேள்வி எழுப்பிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்ப்பாணத்தில் 400 வருட காலத்துக்கும் அதிகமாகத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்ற புகையிலைச் செய்கையில் ஈடுபடுகின்ற மக்களுக்கு ஒரு பணப் பயிர் என்ற வகையில் பொருளாதார ரீதியில் பெரியளவிலான நலன்களை அது ஈட்டிக் கொடுத்து வருகிறது.

எனினும், 2020ஆம் ஆண்டுக்குள் புகையிலைச் செய்கை முற்றாகத் தடை செய்யப்படும் என்று உலக சுகாதார ஒன்றியத்திடம் இலங்கை உறுதியளித்துள்ள நிலையில், மேற்படி புகையிலைச் செய்கையை தங்களது வாழ்வாதாரமாகக் கொண்டு, அதில் நேரடியாகவும், மறைமுகமாகவும் பயன் பெறுகின்ற மக்களுக்கு மாற்று பயிர்ச் செய்கைகளை அறிமுகப்படுத்தி, அதனை ஊக்குவிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

வடக்கில் அனைத்து மாவட்டங்களிலும், கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் புகையிலைச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தாலும், யாழ்ப்பாணத்திலேயே அதிகளவில் இந்தப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில், இம்முறை யாழ்ப்பாணத்தில் 741.615 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் ஆயிரத்து 956 விவசாயிகள் மேற்படி புகையிலைச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிய வருகிறது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் சுமார் 27 ஆயிரத்து 952 குடும் பங்கள் விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்ற நிலையில், 3 ஆயிரத்து 35 குடும்பங்கள் மேற்படி புகையிலைச்செய்கையில் ஈடுபட்டு வருகின்றன. இது மொத்த விவசாயச் செய்கையாளர்களில் நூற்றுக்கு 10.87 வீதமாகும் என்பது குறிப்பிடத் தக்கது. இதனைவிட இப் பயிர்ச்செய்கையில் தங்கியிருப்போர் எண்ணிக்கை அதிகமாக உள்ளது.

தற்போது, யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற மிளகாய் மற்றும் வெங்காயச் செய்கைகள் ஒப்பீட்டளவில் புகையிலைச் செய்கைக்கு அடுத்தபடியாக பொருளாதார ரீதியில் சாதகமான நிலையைத் தருவதாகக் கூறப்படுகின்ற நிலையில், புகையிலைச் செய்கையில் ஈடுபட்டு வருகின்ற விவசாயிகளுக்கான மாற்றுப் பயிர்ச் செய்கை என்ற வகையில், வெங்காயம் மற்றும் மிளகாய் பயிர்ச் செய்கைகளில் ஈடுபடுவதற்காக மானியங்கள், ஊக்குவிப்புக்கள் மற்றும் ஏனைய வசதிகள் செய்து கொடுக்கப் படுமா?.-என்றார். (எ)

## தபால் ரயிலில் கடத்தப்பட்ட கஞ்சா பொலிஸாரால் மீட்பு!



பெட்டிக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், 20.5 கிலோகிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

தலைமன்னார் - கொழும்பு தபால் ரயிலில் நேற்றுமுன்தினம் இரவு 10.45 மணியளவில் இந்த கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

அந்த ரயிலில் சந்தேகத்துக்கு இடமான முறையில் இருந்த இரண்டு பெட்டிகளைச் சோதனையிட்ட போது, அதற்குள் கஞ்சா மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வட மத்திய கடற்படையினர் மற்றும் வங்காலை பொலிஸார் இணைந்து அந்த கஞ்சா பொதிகளைக் கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட கஞ்சா, மேலதிக விசாரணை நடவடிக்கைகளுக்காக வங்காலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ)

## கருத்துப் பகிர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 06

''தடுமாறாத தமிழர்களுக்கு தலைமை ஏற்பது யார்?'' எனும் தொனிப் பொருளில மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிமை காலை 9.15 மணிக்கு, யாழ்ப்பாணம் கலைத்தூது மண்பத்தில் கருத்துப் பகிர் வுறவாடல்இடம்பெறவுள்ளதாக மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தலைவர்வி.எஸ். சிவகரன் தெரிவித்துள்ளார். (இ)

## கல்வி அபிவிருத்தி குழுக்கூட்டம் நாளை

யாழ்ப்பாணம்,ஜூலை 06

வடமாகாண கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டம் நாளை வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு, வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

இந்தக் கூட்டத்தில் ஆசிரியர், அதிபர்வருடாந்த இடமாற்றம், மாணவர்இடைவிலகல், பாடசாலைக் காவலாளி நியமனம், ஆசிரியர் பதவி உயர்வு, உள்ளீர்ப்பு மற்றும் சம்பள நிலுவை, வரவுப் பதிவுக் கைரேகை இயந்திரம் தொடர்பிலும் நிர்வாகம் தொடர்பானவிடயங்களும்- க.பொ.த.(உயர்தர) விஞ்ஞானப் பிரிவில் கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை நடவடிக்கை ஆசிரியர்களின் கற்பித்தல் எண்ணிக்கை போன்ற அபிவிருத்தி தொடர்பான விடயங்களும் பாடசாலை மேற்பார்வை முகாமைத்துவம் தொடர்பான விடயங்கள், நிதி விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளன. (இ)

# சிறப்புற நடந்தேறிய சிவத்தமிழ்ச் செல்வியின் 9 ஆவது ஆண்டு குருபூசை தின நிகழ்வுகள்




யாழ்ப்பாணம், ஜூலை 06

யாழ். தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் முன்னாள் பெருந்தலைவர் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் 9 ஆவது ஆண்டு குருபூசை தின நிகழ்வு நேற்று முன்தினம் காலை 9 மணி முதல் தேவஸ் தானவளாகத்தில்இடம்பெற்றது.

இந்த விழாவில் சிரேஷ்ட சிவாச்சாரியார்கள் இருவர் விருது வழங்கிக் கௌரவிக்கப் பட்டுள்ளனர்.

திருகோணமலை பத்திர காளி கோவில் அறங்காவலர் சிவஸ்ரீ சோமாஸ்கந்த ஐயர் இரவிச்சந்திரக் குருக்கள், இணுவில்பரராஜசேகரப்பிள்ளையார் கோவில் பிரதமகுரு சிவஸ்ரீ.வைத்தீஸ்வரக்குருக்கள் ஆகிய மூத்த சிவாச்சாரியார்களே இவ்வாறு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

ஆலயத்தில் விசேட பூஜை, அன்னையின் நினை வாலயத்தில் வழிபாடு, அன்னையின் உருவச்சிலை வழிபாடு, திருமுறை மடத்தில் விசேடபூசை வழிபாடு என்பன இடம்பெற்றமையைத் தொடர்ந்து துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகள் திருமுறை பாராயணம் இசைத்தனர்.

அதனைத்தொடர்ந்து காலை 9.40 மணிக்கு ஆலய வளாகத்தில்அமைந்துள்ளஅன்னபூரணி மண்டபத்தில் குருபூசைசிறப்பு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் இடம்பெற்ற விழாவில் வலிகாமம் வலய இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி விமலாதேவி நாகேஸ்வரனின் பண்ணிசையரங்கம் இடம் பெற்றது.

அதனைத் தொடர்ந்து ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான பிரதமகுரு வா.அகிலேஸ்வரக் குருக்கள், நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் தலைவர் ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள் ஆகியோரின் பிரார்த்தனையுரைகள், பேராசிரியர் க. தேவராஜாவின் வாழ்த்துரை என்பன இடம் பெற்றன.

விழாவில் பன்னிரண்டாம் திருமுறையானதிருத்தொண்டர் புராணத்தின் 3 ஆம் பாகம் நூலை ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்க விரிவுரையாளர் பண்டிதர் ம. ந.கடம்பேஸ்வரன் வெளியிட்டு வைத்து வெளியீட்டுரையாற்றினார்.

தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் க.தேவராஜாவிடமிருந்து நூலின் முதற்பிரதியை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான உபதலைவர் தேசகீர்த்தி ச.ஆறுமுகநாதன் பெற்றுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து நூலின்சிறப்புப்பிரதிகள்வழங்கி வைக்கப்பட்டன.

இந்த விழாவில் சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் சகோதரி கனகம்மா அப்பாக்குட்டி, தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான அறங்காவலர் சபைத் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், கொழும்பு மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர் பாஸ்கரா, ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான நிர்வாக சபை அங்கத்தவர்கள், துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகள், ஆசிரியர்கள், , மகளிர் இல்ல மாணவிகள், ஆசிரியர்கள், பல்துறை சார்ந்த கலைஞர்கள், மூத்தோர்கள், ஆர்வலர்கள்எனப்பலரும்கலந்து கொண்டனர். (எ)





பொன்.வேணு கிருஷ்ணா

**முதல் சம்பவமாக சிரியாவில் அமெரிக்க தலைமையிலான மோதலை அதிகரிப்பதன் மூலம் ஈரானை வலுவற்றதாக்கும் அவரது உறுதிப்பாட்டில் எந்தவோர் இரகசியத்தையும் ட்ரம்ப் பேணவில்லை**

கட்டாரில் 11,000 அமெரிக்க துருப்புக்களை நிலைநிறுத்தக்கூடியதும், மேலும் அமெரிக்க மத்திய கட்டளையகம் (US Central Command) மற்றும் அமெரிக்க புலனாய்வு அமைப்பு (US intelligence) ஆகியவற்றுக்கான முன்னோடி தளத்தையும் கொண்ட இந்தப் பிராந்தியத்தில் உள்ள மிகப் பெரிய அமெரிக்க இராணுவத் தளத்தின் மீதான விட்டுக்கொடுப்பற்ற நிலை குறித்த தாக்கம் பற்றி, ரில்லர்சனின் மிகத் தெளிவற்ற கருத்துக்கள், வொஷிங்டனிலும், குறிப்பாக பென்டகனிலும் கவலைகளை பிரதிபலித்தன.

எவ்வாறாயினும், முதல் சம்பவமாக சிரியாவில் அமெரிக்க தலைமையிலான மோதலை அதிகரிப்பதன் மூலம் ஈரானை வலுவற்றதாக்கும் அவரது உறுதிப்பாட்டில் எந்தவோர் இரகசியத்தையும் ட்ரம்ப் பேணவில்லை. சவுதி அரேபியா மற்றும் அதன் நட்பு நாடுகளினால் ஆதரிக்கப்பட்ட சன்னி தீவிரவாதிகளின் ஆதரவை கொண்டுள்ள ஈராக் மற்றும் சிரியாவின் இஸ்லாமிய அரசை (Islamic State of Iraq and Syria-ISIS) தோற்கடிப்பது என்ற சாக்குப்போக்கில், ஈரான் மற்றும் ரஷ்யாவின் ஒரு கூட்டாளியான சிரிய ஜனாதிபதி பஷர் அல்-அசாத்தை அகற்றுவதற்கான அதன் போரை நடத்துவதற்கான தளங்களாக பயன்படுத்தும் விதத்தில், அமெரிக்கா இப்பொழுது எவரொருவரும் செல்லக்கூடாத பகுதிகளையும் அல்லது ''மோதலற்ற மண்டலங்களையோ'' உருவாக்குவதற்கு முற்படுகின்றது.





மத்திய கிழக்கில் உள்ள வெடிப்புத் தன்மையான நிலைமை ட்ரம்ப் நிர்வாகத்தின் பொறுப்பற்ற தன்மையினால் மட்டும் விளைந்ததல்ல, கால் நூற்றாண்டு காலமாக ஒட்டுமொத்த சமூகங்களையும் அழித்துவிட்ட, மில்லியன் கணக்கில் மக்களைக் கொன்ற, மேலும் பல மில்லியன்களுக்கும் மேற்பட்ட மக்களை வீடுகளற்ற அகதிகளாக்கிய அமெரிக்க ஏகாதிபத்திய தலையீட்டினால் உருவான குற்றவியல் போர்களினாலும் விளைந்ததாகும். மூலோபாய எண்ணெய் வளம் நிறைந்த பிராந்தியத்தில் அதன் மேலாதிக்கத்தை பாதுகாக்க முனைகின்ற செயல்முறையில், முதலாம் உலகப் போருக்குப் பின்னர், பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தால் திணிக்கப்பட்ட அரசு அமைப்பு முறையை அமெரிக்கா கிட்டத்தட்ட அழித்துவிட்டது. இது ஐரோப்பா, ஆசியா மற்றும் ஆபிரிக்காவிற்கும் இடையே ஒரு முக்கிய மூலோபாய குறுக்கு பாதையையான மத்திய கிழக்கை மறுபங்கீடு செய்ய ஒரு புதிய வல்லரசுகளுக்கு இடையிலான போராட்டத்தை உருவாக்க வழிவகுக்கின்றது.

**பிராந்திய மற்றும் முக்கிய சக்திகளையும் மற்றும் மனிதகுலத்தையும் ஒரு பேரழிவிற்குள் விரைவாக மூழ்கடிக்கக் கூடிய ஒரு போருக்கு எழுச்சி தரும் உடையக்கூடிய நிலைமையின் எழுச்சியையே இவை வெளிப்படுத்தியுள்ளன.**

அமெரிக்க ஏகாதிபத்தியம் மத்திய கிழக்கில், எகிப்திய இராணுவ சர்வாதிகாரம், அத்துடன், சவுதி அரேபியா மற்றும் வளைகுடா நாடுகளின் சர்வாதிகார முடியாட்சிகள் போன்ற மிகவும் பிற்போக்குத்தனமான ஆட்சிகளுடன் தன்னை இணைத்துக் கொண்டது. கட்டார் மீதான முற்றுகையையும், அசாத்தை வெளியேற்றுவதற்காக சிரியாவில் நடக்கும் அமெரிக்கப் போரையும் ஆதரிப்பதாக இஸ்ரேல் சமிக்ஞை செய்துள்ளது. சிரியாவில், அமெரிக்காவுக்கும் ரஷ்ய படைகளுக்கும் இடையிலான ஒரு மோதல் இரண்டு அணுஆயுதம் தாங்கிய சக்திகளை நேரடி மோதலுக்கு கொண்டு வரும் விதமாக அச்சுறுத்துகையில், துருக்கியும், ஈரானும் கட்டாரை செயலூக்கத்துடன் ஆதரித்துவருகின்றன.

ஐரோப்பிய சக்திகள், ஈரான் மற்றும் கட்டார் உடனான அவர்களின் வளர்ந்து வரும் உறவுகள் உட்பட, மத்திய கிழக்கில் அவற்றின் பொருளாதார மற்றும் மூலோபாய நலன்களை அச்சுறுத்தும் பரந்த நெருக்கடியை அலட்சியப்படுத்தவில்லை. Frankfurter Allgemeine Sonntagszeitung உடனான சமீபத்திய நேர்காணலில், கட்டாருக்கும், சவுதி அரேபியா மற்றும் அதன் நட்பு நாடுகளுக்கும் இடையேயான உறவுகளின் ''மோசமான'' கடுமையை ஜேர்மன் வெளியுறவு மந்திரி சிக்மார் காப்ரியேல் விமர்சித்தார். ''இந்த சர்ச்சை போருக்கு வழிவகுக்குமென'' அவர் எச்சரித்தார். பிரான்ஸ் அதன் பங்கிற்கு, பாரசீக வளைகுடாவில் கட்டார் உடனான கூட்டு இராணுவ பயிற்சிகளில் சமீபத்தில் ஈடுபட்டுள்ளது.

பிராந்திய மற்றும் முக்கிய சக்திகளையும் மற்றும் மனிதகுலத்தையும் ஒரு பேரழிவிற்குள் விரைவாக மூழ்கடிக்கக்கூடிய ஒரு போருக்கு எழுச்சி தரும் உடையக்கூடிய நிலைமையின் எழுச்சியையே இவை வெளிப்படுத்தியுள்ளன. போருக்கு மூலகாரணமான தேசிய அரசமைப்பு முறைக்கும் காலாவதியாகிப்போன இலாப நோக்கு அமைப்புமுறைக்கும் முடிவைக்கொண்டுவர தொழிலாள வர்க்கம் அதன் சொந்த சோசலிச மற்றும் சர்வதேசியவாத வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தலையிடாவிட்டால், ஐரோப்பாவிலோ, ஆசியாவிலோ அல்லது மத்திய கிழக்கிலோ தூண்டப்படும் குறிப்பிட்ட எதுவாகினாலும், இத்தகைய ஒரு மோதல் தவிர்க்க முடியாதது.

### ''மிக அதிகமான'' சீன அழுத்தம்

சீனா பிராந்தியத்தில் மேலும் துரிதப்படுத்தலை தடுக்க விரும்பினால், வட கொரியா அதனது அணுஆயுத மற்றும் ஏவுகணைத் திட்டங்களை கைவிடுவதற்கு மிக அதிகளவு பொருளாதார மற்றும் இராஜதந்திர அழுத்தத்தை அது கொடுக்க வேண்டும் என, சற்றே மறைமுகமான அச்சுறுத்தலை விடுக்கும் வகையில் அமெரிக்க இராஜாங்க செயலர் றெக்ஸ் ரில்லர்சன் அண்மையில் அறிவித்தார்.

வேறுவிதமாக கூறினால், பியோங்யாங் ஆட்சிக்கு கடிவாளமிட பெய்ஜிங் தவறினால், அமெரிக்கா இராணுவ நடவடிக்கைகளை நாடக்கூடும்.

(கேள்வி தொடரும்)





# சுதந்திர வேட்கை



25

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கி பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.




## அத்தியாயம் - II

## காத்திருந்த காலம்

1983 ஆம் ஆண்டுக்கு முன், நாம் காத்திருந்த காலத்தில் நிறையப் படிக்கக் கிடைத்தது. புத்தகக் கடைகளில் நூல்களைத் தேடி வாங்குவதில் நேரத்தைப் போக்காட்டுவது எமது ஆகப் பெரிய மகிழ்ச்சியான பொழுதுபோக்குகளில் ஒன்றாக இருந்தது. என்னை அறியாமலேயே பெண்கள் எழுதிய நூல்களைத் தேர்ந்தெடுத்தேன். அல்லது பெண் எழுத்தாளர்களின் நூல்களையே தேடிக்கொண்டிருந்தேன். பெண் எழுத்தாளரான டொறிஸ் லெசிங்கின் படைப்புகள் என்னைக் கவர்ந்தன; அவரது ஆளுமையும் என்னைக் கவர்ந்தது. தவறுகளை இனம் காண்பதில் அவருக்கு இருந்த ஆற்றலும், தமது வாழ்க்கையை மாற்றுவதற்கு வேண்டிய முடிவுகளை எடுக்கும்போது உணர்ச்சி பூர்வமாகத் தாம் எவ்வளவு பாதிக்கப்படுவார் என்றோ மற்றவர்கள் எத்தகைய வேதனை அடைவார்கள் என்றோ மனத்தளம்பல் இல்லாமல் அவர் முடிவுகளுக்கு வரும் உறுதி எனக்குப் பிடித்திருந்தது. இன்னொருவர் எலிசபெத் குரோல். சீனப் பெண்களைப் பற்றி இவர் நிறைய எழுதியிருக்கிறார். குறிப்பாக ''சீனாவில் பெண்ணியமும் சோஷலிசமும்'' என்ற அவருடைய நூல் என்னைக் கவர்ந்தது. சீனாவில் பெண்கள் இயக்கம் பற்றிய சுவையான விவரம் அதில் உள்ளது. பெண்ணியப் போராட்டத்துக்கும் சமுதாயப் போராட்டத்துக்கும் இடையிலான நலன்களின் முரண்பாடுகள் பற்றி அவர் அதில் விவரிக்கிறார். அதேபோல சோஷலிச சமுதாயத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றியும் அவர் கூறுகிறார். அடுத்து அலனோ ஹெயற்லிங்கர் எழுதிய ''பெண்களும் அரச சோஷலிசமும்; சோவியத் யூனியனிலும் செக்கோஸ்லாவாக்கியாவிலும் சமத்துவம் இன்மை'' என்ற எழுத்தாக்கத்தின் தலைப்பே கருவை உணர்த்துவது. அதில் நிறைய விவரங்கள் உள்ளன. சிந்தனையைக் கிளறுவனவாகவும் அவை அமைந்திருக்கின்றன. சூசன் பிறவுண் மில்லர் என்பவர் பாலியல் வன்முறைக்கு எதிராக ''எமது விருப்பத்துக்கு மாறாக'' என்ற மிகச் சிறந்த நூலை எழுதியிருக்கிறார். ஆன் ஒக்லியின் பெண்கள் தொடர்பான சமூக ஆய்வுகளும் எப்போதுமே கருத்துப் பொதிந்தவை. ''சாண்டினோவின் புதல்விகள்'', ''மூன்றாம் உலகு இரண்டாம் பால்'' ஆகியவையும் இன்னும் பல நூல்களும் போராட்டத்தில் ஈடுபட்ட பெண்களின் வெற்றிகளையும் அவர்கள் முகம் கொடுத்த இடர்களையும் விளக்குவன; அவற்றோடு எம்மையும் இணைத்துக் கொள்ளத் தூண்டுவன; உற்சாகம் தருவன. இவை எல்லாம் எப்போதோ நடந்தவை போன்ற பிரமையைத் தருவன. இவை எல்லாம் நேற்றைய நூல்கள். ஆனாலும் அவை போராட்டத்தில் ஒரு வேறுபட்ட மெய்யுண்மையை விளக்குகின்றன.

ஓர் ஆய்வு முயற்சிக்கான அறிவைத் தரவல்ல ஒரு நீண்ட பட்டியல் நூல்களை வாசித்திருந்தேன். எழுதத் தொடங்கலாமா என்ற சிந்தனை கூட வந்து போயிற்று. இளவயதில் இருந்தமையை விட இப்போது தன்னம்பிக்கை அதிகரித்து இருந்தது. போராட்டத்தில் ஈடுபடவிருக்கும் தமிழ்ப் பெண்களுக்கு உதவியாக, வேறு உலக விடுதலைப் போராட்டங்களில் ஈடுபட்ட பெண்களின் அனுபவங்களை சிறிய நூல் வடிவில் கொண்டுவர முற்பட்டேன். உலகம் முழுவதும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் எவ்வளவோ பொதுத் தன்மைகள் இருக்கின்றன. ஆகவே, போராட்டங்களில் ஈடுபடும் ஏனைய பெண்களின் அனுபவங்களைத் தமிழ்ப் பெண்களுக்குப் பகிர்ந்து கொள்ள என்றும், அவர்களுடன் இதய பூர்வமாக ஒன்றித்து நிற்க வேண்டும் என்றும் விரும்பினேன். நான் எனது நூலை எழுதத் தொடங்குமுன்னரே தமிழ் மக்களுக்கு எதிரான இனக்கலவரம் தோன்றியதால், 1983 ஆம் ஆண்டு ஓகஸ்டில் நாம் சென்னைக்குத் திரும்பினோம். எனது ஆய்வுத் தரவுகள் அனைத்தையும் இலண்டனில் விட்டுவிட்டு ஒரு சில குறிப்புகளுடனேயே புறப்பட்டேன். இறுதியில் இவையே 'பெண்களும் புரட்சியும்' என்ற சிறுநூலாக வடிவெடுத்தது.

## திருப்புமுனை: கறுப்பு ஜூலை



தமிழ் மக்களுக்கு எதிரான இனக் கலவரம் என்ற வடிவில், 1983 ஆம் ஆண்டு ஜூலையில் இலங்கையிலே வெடித்த வன்செயல் சம்பவங்கள், தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்தில் தலைகீழான மாற்றத்தைக் கொண்டு வந்தன. தமிழ் மக்களுக்கு எதிரான கலவரங்கள் 1958 ஆம் ஆண்டில் இருந்தே காலத்துக்குக் காலம் தலைதூக்கிய போதும் 1983 ஆம் ஆண்டில் இடம் பெற்ற இனப் பூகம்பமே இலங்கை வரலாற்றில் மிகக் கறை படிந்ததாகும். குரூரமும், காடைத்தனமும், காட்டுமிராண்டித்தனமும் ஒன்றையொன்று விஞ்சி நின்றன. தமிழ் மக்களுக்கு எதிரான கலவரம் நாடு முழுவதையும் உலுக்கியது. சிங்கள மக்களிடம் உறைந்து கிடந்த வரலாற்றுக் குரோதம் வன்செயல் எரிமலையாய் வெடித்துச் சிதறி, முன்னெப்போதும் காணாத அளவுக்கு மரணத்தையும் அழிவையும் ஏற்படுத்தியது. இரத்த வெறி கொண்டு அட்டகாசம் புரிந்த சிங்களக் காடையர்களால் அநாதரவான பல்லாயிரம் தமிழ் மக்கள் கண்ட துண்டமாக வெட்டிச் சரிக்கப்பட்டார்கள். சிங்களவரின் மனிதத்துவம் மறைந்த நிலையும் இனக் கலவரத்தில் காணப்பட்ட இனக் கருவறுப்பு நோக்கமும், இனக் காழ்ப்புணர்வுடனான வன்செயல் பீறிடலும் நாகரிக உலகின் மனச்சாட்சியை ஒரு கணம் உலுக்கியது. இந்த இனவெறி தெற்காசியாவின் நோயாளியாக, சிங்கள இனம் மீது கறை பூசியது.

தமிழ் மக்களுக்கு எதிரான இனக் கலவரம் என்ற வடிவில், 1983 ஆம் ஆண்டு ஜூலையில் இலங்கையிலே வெடித்த வன்செயல் சம்பவங்கள், தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்தில் தலைகீழான மாற்றத்தைக் கொண்டு வந்தன. தமிழ் மக்களுக்கு எதிரான கலவரங்கள் 1958 ஆம் ஆண்டில் இருந்தே காலத்துக்குக் காலம் தலைதூக்கிய போதும் 1983 ஆம் ஆண்டில் இடம்பெற்ற இனப் பூகம்பமே இலங்கை வரலாற்றில் மிகக் கறை படிந்ததாகும்.

வடபுல நகரமான யாழ்ப்பாணத்தில் நடந்த ஒரு கெரில்லாத் தாக்குதலுக்குச் சிங்கள மக்களின் பதிலடியாகவே இந்த இனக் கலவரம் பொங்கி வழிந்ததாகக் கூறப்பட்டது. விடுதலைப் புலிகளின் கெரில்லா அதிரடிப் பிரிவு ஒன்று, பிரபாகரனின் நேரடித் தலைமையில் யாழ்ப்பாணம் திருநெல்வேலியிலே, இராணுவ வண்டித் தொடர்மீது பதுங்கித் தாக்குதல் ஒன்றை நடத்தியது. இது 1983 ஆம் ஆண்டு ஜூலையில் நடந்தது. பதின்மூன்று இராணுவத்தினர் அதே இடத்தில் கொல்லப்பட்டார்கள். விடுதலைப் புலிகளைப் பொறுத்த வரையில் இது ஒரு வெற்றிகரமான அதிரடித் தாக்குதலாகும். ஆனால், சிங்கள அரசைப் பொறுத்தவரையிலே இது மானத்தை வாங்கும் படுதோல்வியாகும். சிறிலங்கா இராணுவத்தில் இத்தனை படையினர் கொல்லப்பட்டமை இதுவே முதற் தடவை. ஜெயவர்த்தனா அரசு குமுறியது. சிங்கள ஊடகங்களும் இந்தச் சம்பவத்தை பூதாகாரப்படுத்தின; உணர்ச்சியைக் கிளறும் அறிக்கைகளால் தீ மூட்டின. சிங்கள மக்களிடையே இன வெறி கனன்றது. கொல்லப்பட்ட அரச படையினர்க்கு, சம்பவம் நடந்த மறுநாள் தேசிய கௌரவத்துடன் இறுதிச் சடங்கு நடத்தப் போவதாக அரசு அறிவித்தது. தேசிய துக்கதினமாக அந்த நாள் வடிவமைக்கப்பட்டது. ஆனால், சிங்கள அரசியல்வாதிகள், பௌத்த தேரர்கள், காவற்றுறையினர், அரசபடையினர் ஆகியோரிடையே வேறோர் இரகசியத் திட்டம் இருந்தது. இறந்து போன அரச படையினருக்காக பழிக்குப் பழி வாங்கும் நாளாகவே அந்த நாளை அவர்கள் இலக்குக் குறித்தார்கள்.

(தொடரும்...)

காலைக்கதிர் Kalaikkathir







கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படும் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள், மாவீரர் குடும்பங்களுக்கான 2017ஆம் ஆண்டுக்கான வாழ்வாதார உதவித்திட்டங்கள் வழங்கும் ஆரம்ப நிகழ்வும் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளை அறிவுறுத்தும் செயற்பாடும் முதல்கட்டமாக மன்னார் மாவட்டத்தில் அண்மையில் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் ஜே.ஜே.சி.பெலிசியன் தலைமையில் வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து, கிராம அபிவிருத்தி அமைச்சின் உப அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த வருடம் 5 மாவட்டங்களிலும் இருந்து ஒரு மாவட்டத்துக்கு 60 பயனாளிகள் வீதம் முன்னுரிமை அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட 300 பயனாளிகளுக்கு தலா 50 ஆயிரம் ரூபா வீதம் திட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியொதுக்கீட்டில் தெரிவு செய்யப்பட்ட 10 குடும்பங்களுக்கு நல்லின கோழிக்குஞ்சுகளும், கோழி வளர்ப்புக்கான உபகரணங்களும் வழங்கப்பட்டன. (எ-100)









தென்மராட்சி -அல்லாரை அறுகம்புலம் மஹா கணபதிப்பிள்ளையார் ஆலய கைலாவாகனத் திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றது. (எ-21)



வட்டுக்கோட்டை தெக்கணப் பாய் கண்ணலிங்கேஸ்வரர் ஆலய சப்பறமும் மற்றும் தேர்த் திருவிழா அண்மையில் வெகு சிறப்பாக நடைபெற்றன.







கிளிநொச்சி செல்வநகர் முதியோர் சங்கத்தால் முதியோர்களுக்கான சுழற்சி முறை கடன் உதவி வழங்கும் நிகழ்வு செல்வநகர் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் நடை பெற்றது.நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஊடாகப் பெறப்பட்ட ஒரு லட்சம் ரூபா நிதியை இந்த சுழற்சி முறையான கடன் உதவியாக செல்வநகர் முதியோர்களுக்கு வழங்கப்பட்டது.

# ரயில் கடவை பணியாளர் இல்லை; நொச்சிமோட்டை மாணவர் சிரமம்

வவுனியா, ஜூலை 06

வவுனியா - நொச்சி மோட்டை பகுதியிலுள்ள ரயில் கடவைக்கு பணி யாளர் இன்மையால் அத னைக் கடந்து செல்லும் பொது மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் சிரமங்களை எதிர்கொள் கின்றனர்.

இது தொடர்பில் அவர்கள் கூறியவை வருமாறு:

ரயில் கடவைக்கு அருகில் பாடசாலை உள் ளதால் மாணவர்கள் அந் தக்கடவையைக்கடந்தே செல்ல வேண்டிய நிலை யுள்ளது.

முன்னர் அந்தப்பகுதி யிலிருந்த கடவையில் பணியில் இருந்த தற் காலிக பணியாளர்கள் கடமையில் இருந்து விலகியுள்ளனர். அதைய டுத்து சிறிது காலம் அந் தப்பகுதியில் பொலிஸார் கடமையில் இருந்தனர். தற்போது கடந்த சில தினங்களாக யாருமே கட மைக்கு வருவதில்லை.

இதன் காரணமாக ரயில் கடவையைக் கடந்து செல்வதில் சிர மங்களை எதிர் கொள்ள வேண்டியதாக உள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு ரயில் கட வைக்கு பணியாளர் ஒரு வரை நியமிக்க வேண் டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம்.

மேலும், தற்போது ரயில் கடவை பணியாளர் தங்கியிருக்கும் கொட் டில் சரிந்து வீழ்ந்துள்ளது. அத்துடன் ரயில் கடவை பாதுகாப்புக்குப் போடப் பட்ட தடைகம்பியும் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

எனவே, இதனையும் கருத்தில் கொண்டு அதைச் சீரமைத்து தர வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள் ளனர். (எ)

சேதமடைந்த நிலையில் பணியாளர் தங்கியிருக்கும் கொட்டில்



## சட்டவிரோத மணல் அகழ்வு சூறையாடப்படும் இயற்கைவளம்

கிளிநொச்சியின் பல பகுதிகளில் மேற்கொள் ளப்பட்டு வரும் சட்ட விரோத மண் அகழ்வால், இயற்கை வளங்கள் மிகவும் மோசமான முறையில் சூறையாடப் பட்டு வருகின்றன.

குறிப்பாக அக்கராயன் குளம் பகுதியில் மிகவும் மோசமான முறையில் மண் அகழ்வு இடம் பெற்று வருவதாகத் தெரி விக்கப்படுகின்றது.

இயற்கையாக கிடைக் கக்கூடிய இவ்வாறான வளங்களை முறையற்ற விதத்தில் அகழ்வத னால், உயர்ந்து வளர்ந்த மரங்கள் காணப்படும் இடங்களில் மண்ணரிப்பு ஏற்பட்டுள்ளது. பல இடங் களில் மரங்கள் சாய்ந்து வீழ்ந்துள்ளன. தொடர் பாக சம்பந்தப்பட்ட அதி காரிகள் விரைந்து நடவ டிக்கைஎடுக்கவேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின் றனர். (எ)

## கிளிநொச்சியில் கடும் வறட்சி; 23 ஆயிரம் குடும்பங்கள் பாதிப்பு!



கிளிநொச்சி மாவட்டத்தில் தொடரும் கடும் வறட்சியுட னான காலநிலை காரணமாக 23 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 75 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட் டுள்ளனர்.

பல கிராமங்களில் கிணற்று நீர் வற்றியுள்ளதால், மக்கள் குடிதண்ணீர் பிரச்சினைக்கு முகங்கொடுத்து வருகின்றனர். அத்துடன் விளை நிலங்கள் கருகி வருகின்றன கால்நடை களும் நீரின்றி இறந்து வரு கின்றன.

பருவமழை பொய்த்தமை யால் மாவட்டத்தில் அதிக வெப்பத்துடனான காலநிலை தொடர்கின்றது. குறிப்பாக, பூநகரி பிரதேச செயலர் பிரி வில் ஞானிமடம், கிராஞ்சி, கருக்காய்தீவு உள்ளிட்ட கிரா மங்களும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர்பிரிவில் முக மாலை பிரதேசம் உள்ளிட் டவையும்-

கண்டாவளை பிரதேசத் தில் தட்டுவன்கொட்டி, கல் லாறு உள்ளிட்ட கிராமங்களும், கரைச்சி பிரதேசத்தில் அக்க ராயன், கோணாவில் உள்ளிட்ட கிராமங்களும் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளன என்று மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் தெரிவிக்கின்றது.

அந்தப் பிரதேசங்களில் குடிதண்ணீர் தட்டுப்பாடு மிகவும் பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ள நிலையில், அதனைத் தீர்க்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டு மென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

தற்போதைய காலநிலை தொடர்ந்தும் நீடிக்கும் பட்சத் தில், பெரிய பிரச்சினைக்கு முகங்கொடுக்கும் நிலை ஏற் படும் என்று தெரிவிக்கப்படு கிறது. (எ)

# மன்னார் நகர சபைக்கான அலுவலகக் கட்டடம் திறப்பு



மன்னார் நகர சபையின் புதிய அலுவலகக் கட்டடத்தை வட மாகாண கல்வி அமைச்சர் கந்தையா சர்வேஸ்வரன் நேற்று முன்தினம் திறந்து வைத்தார்.

மன்னார் நகர சபையின் செயலாளர் எக்ஸ்.எல்.லெம் பேட் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் வட மாகாண முதலமைச்சரின் பிரதி நிதியாக வட மாகாண கல்வி அமைச்சர் கந்தையா சர்வேஸ் வரன் கலந்துகொண்டார். அவருடன் இணைந்து வட மாகாண அமைச்சர் பா.டெனிஸ் வரன், வட.மாகாண சபை உறுப்பினர்களான வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன், சட் டத்தரணி எஸ்.பிரிமூஸ் சிறாய்வா மற்றும் நாடாளு மன்ற உறுப்பினர்கள் அலுவல கத்தை வைபவ ரீதியாகத் திறந்து வைத்தனர்.

உலகவங்கி, ஆஸ்திரேலியா அரசின் வெளிவிவகார மற்றும் வர்த்தகத் திணைக்கள நிதி உதவி மற்றும் வடமாகாண முதலமைச்சரின் அமைச்சின் நிதிப்பங்களிப்புடன், வடக்கு கிழக்கு உள்ளூராட்சி சேவை கள் மேம்படுத்தல் திட்டத்தின் கீழ் 3 கோடியே 50 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மன்னார் நகர சபையின் புதிய அலுவலகக் கட்டடம் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ)

# அரசுடன் இணையுமாறு மஹிந்தவுக்கு அழைப்பு விடுக்கிறார் வசந்த சேனநாயக்க

தேசிய அரசுடன் முன் னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இணைந்தால் எவ்வளவு நன்றாக இருக் கும். நாட்டைத் துரிதமாக முன்னேற்றி விடலாமே என்று வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் வசந்த சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தேசிய அரசில் அனை வரும் இணைந்து இந்த நாட்டின் அபிவிருத்திக் காக வேலை செய்ய வேண்டிய கட்டத்தில் நாம் இருக்கின்றோம். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த கூட எம்முடன் இணைய வேண்டும் என்றே நாம் விரும்பு கின்றோம்.

மைத்திரி அணி, ரணில் அணி மற்றும் மஹிந்த அணி என மூன்று அணிகளும் ஒன்று சேர்ந்தால் அதை விட ஒரு நல்ல சந்தர்ப்பம் இந்த நாட்டுக்குக் கிடைக்காது.

நாட்டை முன்னேற்று வதற்கு அதைவிட ஒரு நல்ல வாய்ப்புக் கிடைக் காது. ஆனால், அது நடக் குமா என்பது தான் சந் தேகம்.

குறுகிய அரசியல் இலாபங்களை ஒதுக்கி வைத்து விட்டு நாம் ஒன் றிணைவது தான் நாட் டின் எதிர்காலத்துக்கு நல்லது. அதற்கான அழைப்பை நான் மஹிந்த ராஜபக்ஷவுக்கு விடுக்கின்றேன்.

ஒருவரை விமர்ச்சித் துக் கொண்டு அரசியல் செய்வதால் நாட்டுக்கு எந்த நன்மையும் கிடைக் காது.

நான் தான் ஆட்சி செய்ய வேண்டும் என்ற மனோநிலையை ஒதுக்கி வைத்து விட்டு, நாம் ஆட்சி செய்வோம் என்ற நிலைப்பாட்டுக்கு நாம் எல்லோரும் வர வேண் டும்.

அவ்வாறில்லாது போலியாக நாம் தேச பக்தி பற்றி பேசுவதில் அர்த்தமில்லை. அது பொய்யான நாட்டுப் பற்றாகும். எம்மைவிட பின்நின்ற எத்தனையோ நாடுகள் முன்னேறி விட் டன.

ஆனால், நாம் பின் நோக்கியே தான் சென்று கொண்டிருக்கின்றோம். எமது பிழையான அரசி யலே இதற்குக் காரணம்.

இந்த அரசியல் கலா சாரம் மாற வேண்டும். அப்போது தான் நாமும் ஏனைய நாடுகளைப் போல் முன்னுக்கு வர முடியும்.-என்றார். (எ)

## காய்த்து குலுங்குகிறது பேரீச்சை! நுவரெலியாவில் அதிசயம்



அதிக வெப்பமான கால நிலையில் வளரும் பேரீச்சைபழம் மரம் அதிக குளிரான நுவரெலியாவில் வளர்ந்துள்ளது. நுவரெலியா, தலவாக்கலை பகுதி யில் இந்த மரம் வளர்ந்துள்ளதாகத் தெரிவிக் கப்படுகிறது. தலவாக்கலை பொலிஸ் நிலையத்துக்கு அருகில் அமைந்துள்ள இந்த மரத்தில் தற்போது 5 குலைகளில் பேரீச்சை பழங்கள் காணப்படுகின்றன.

அவற்றில் இரு குலைகள் நேற்று முன்தினம் பொலிஸ் அதிகாரிகளால் வெட்டப்பட்டுள்ளன என்று குறிப்பிடப்படுகின்றது. (எ)

# இணைப்பு பேச்சு நடக்கவில்லை: தொண்டர்களைக் குழப்ப முயற்சி!

## அமைச்சர் ஜெயக்குமாருக்கு கே.பி.முனுசாமி கண்டனம்



அ.தி.மு.க. அணிகள் இணைப்பு பேச்சு நடக்கிறது என அமைச்சர் ஜெயக்குமார் கூறிய கருத்துப் பொய்யானது. தொண்டர்களை அவர் குழப்ப முயற்சிக்கிறார் என்று முன்னாள் அமைச்சர் கே.பி. முனுசாமி குற்றம்சாட்டியுள்ளார்.

அ.தி.மு.கவில் இரு அணிகளையும் இணைப்பதற்கான பேச்சுக் குழுக்கள் அமைக்கப்பட்டன. ஆனால், தங்கள் நிபந்தனைகளை முதல்வர் கே.பழனிச்சாமி அணியினர் ஏற்காதமையால், பேச்சுக் குழுவைக் கலைப்பதாக ஓ.பன்னீர் செல்வம் அறிவித்தார். அதன் பின், டி.டி.வி. தினகரன் தலைமையில் 3 ஆவதாக ஓர் அணி உருவானது.

இந்நிலையில், ஓ.பி.எஸ். அணி யைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் க.பாண்டியராஜன், முதல்வரையும் அமைச்சரையும் நேற்றுமுன்தினம் இரவு சந்தித்தார் எனத் தகவல் வெளியானது. அதைத் தொடர்ந்து, மற்றொரு முன் னாள் அமைச்சரும் முதல்வர் பழனிச்சாமியை நேற்றுக் காலை சந்தித்தார் என பேசப்பட்டது. இந்த தகவல் அ.தி.மு.க. வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது. ஓ.பி. எஸ். தரப் பில் இருந்து 3 பேர் பழனிச்சாமி அணிக்கு வர உள்ளனர் எனக் கூறப்பட்டது.

இதுகுறித்து ஊடகவியலாளர்களிடம் அமைச்சர்டி.ஜெயக் குமார் நேற்றுமுன்தினம் காலை தெரிவித்தவை வருமாறு–

''இரு அணிகள் இணைப் புக்கான பேச்சு நடந்து வருகிறது. குழு கலைக்கப்பட்டாலும் நாங்கள் தொடர்ந்து பேசி வருகிறோம். ஓ.பி.எஸ். அணியைச் சேர்ந்தவர்கள் எங்களைச் சந்தித்து வருகின்றனர்.

''இரு அணிகளும் இணைவதற்கான சூழல் அதிகமாக உள்ளது. கட்சியை வழிப்படுத்துவதற்காக 7 பேர் கொண்ட குழு அமைக்கப்படும்'' என்று தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், ஓ.பி.எஸ். அணியைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் கே.பி.முனுசாமி இதுதொடர்பில் தெரிவித்தவை வருமாறு:-

நாங்கள் 2 கோரிக்கைகளை வைத்தோம். இடையில் இணைப்பு பேச்சுக்கு அவர்கள் குழு அமைத்தனர். நாங்களும் குழு அமைத்தோம். சசிகலா சிறைக்கு சென்றாலும் அவரது கட்டுப்பாட்டில்தான் கட்சி உள்ளது. இன்னும் சசிகலா தலைமையில்தான் செயல்படுகிறோம் என்பதை அவர்கள் அழுத்தமாக காட்டி வருகின்றனர். அதனால் பேச்சு நடத்த வில்லை.

ஆனால், பேச்சு நடக்கிறது என அமைச்சர் ஜெயக்குமார் பேகின்றமையை வன்மையாகக் கண்டிக்கிறோம். செயல் வீரர்கள் கூட்டத்துக்கு செல்லும் ஓ.பன்னீர்செல்வத்துக்கு பெரும் வரவேற்பு உள்ளது. இதை அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அரசு செலவில் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவை அவர்கள் நடத்தியபோது, எங்கும் வரவேற்பு இல்லை. கூட்டமும் இல்லை. அதனால் ஏற்பட்ட காழ்ப்புணர்ச்சி காரணமாக, தொண்டர்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்த இதுபோன்ற கருத்துகளை ஜெயக்குமார் கூறி வருகிறார். இதை அவர் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சமீபகாலமாக இரு தரப்பினரும் ஒருவரை ஒருவர் விமர்சிப்பதை நிறுத்தியிருந்த நிலையில், மீண்டும் தற்போது மோதல் தொடங்கியுள்ளது.

இதற்கிடையே, டி.டி.வி. தினகரன் திடீர் பயணமாக நேற்றுமுன்தினம் காலை விமானத்தில் மும்பை புறப் பட்டுச் சென்றார். இதுதொடர்பாக அவரது ஆதரவாளர்கள் கூறும் போது, ''சட்ட வல்லுநர்களைச் சந்தித்து ஆலோசனை நடத்துவதற்காக அவர் மும்பை சென்றிருக்கலாம்'' எனத் தெரிவித்துள்ளனர்.

# ஜெயலலிதா மரணம் தொடர்பாக நீதி, விசாரணை கோரிய வழக்கு விசாரணை ஒத்திவைப்பு!



ஜெயலலிதா மரணம் தொடர்பாக நீதி, விசாரணை நடத்தக்கோரி தொடரப்பட்ட வழக்குகள் மீதான விசாரணை நாளை 7 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

மறைந்த முதல்வர் ஜெயலலிதாவின் மரணம் குறித்து 3 ஓய்வு பெற்ற உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தலைமையில் விசாரணை கமிஷன் அமைக்க உத்தரவிடக்கோரி சென்னை அரும்பாக்கத்தைச் சேர்ந்த பி.ஏ.ஜோசப் என்பவர் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

இதேபோல், ஜெயலலிதாவின் மரணம் குறித்து சி.பி.ஐ. அல்லது என்.ஐ.ஏ விசாரணை அமைப்புகளைக் கொண்டு விசாரணை நடத்தக் கோரி நாகப்பட்டினம் மாவட்டம் செம்பனார்கோவிலைச் சேர்ந்த அ.தி.மு.க. பிரமுகர் ஞானசேகரன் என்பவரும் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

மேலும், ஜெயலலிதாவின் மரணம் தொடர்பாக ஐ.ஏ.எஸ். அதிகாரி சகாயம் தலைமையில் குழு அமைத்து விசாரணை நடத்தவேண்டுமெனசென்னை சுங்கம் மற்றும் கலால் சேவை வரிதீர்ப்பாய உதவி ஆணையர் பி.பாலமுருகனும் தனியாக வழக்குத் தொடர்ந்துள்ளார்.

இதில் பி.ஜோசப் தொடர்ந்த வழக்கில் மட்டும் அப்போலோ மருத்துவமனை மற்றும் தமிழக சுகாதாரத்துறைச் செயலர் ஆகியோர் தனித்தனியாகப் பதில் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த வழக்குகள் மீதான விசாரணை நேற்று முன்தினம் தலைமை நீதிபதி இந்திரா பானர்ஜி மற்றும் நீதிபதி எம்.சுந்தர் ஆகியோர் அடங்கிய முதல் அமர்வில் பட்டியலிடப்பட்டு இருந்தது.

ஆனால் மனுதாரர் ஜோசப் தரப்பு வழக்கறிஞர் வராதமையால் வழக்கைத் தள்ளிவைக்க வேண்டுமென நீதிபதிகளிடம் கோரப்பட்டது.

இதையடுத்து இந்த வழக்குகள் மீதான விசாரணையை நீதிபதிகள் நாளை 7 ஆம் திகதியன்று விசாரிப்பதாகத் தெரிவித்தனர்.

# தீவிரவாதம், வன்முறைக்கு எதிராக நாம் போராட வேண்டிய காலம் இது!

## இஸ்ரேலில் பிரதமர் நரேந்திரமோடி தெரிவிப்பு

## 70 ஆண்டுகள் காத்திருந்தோம் என்கிறார் நேதன்யாகு




ஜெருசலேம், ஜூலை 06

தீவிரவாதம், வன்முறைக்கு எதிராக நாம் ஒன்றுபட்டு போராட வேண்டிய காலம் இது என்று இஸ்ரேல் சென்றுள்ள பிரதமர் மோடி கூறியுள்ளார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடி மூன்றுநாள் உத்தியோக பூர்வ விஜயமாக இஸ்ரேல் சென்றுள்ளார். ஜெருசலேம் விமான நிலையத்தில் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு பிரதமர் மோடியை நேரில் வரவேற்றார்.

இதையடுத்து வரவேற்பு நிகழ்ச்சி, டேன்சிகர்பூ பண்ணை, யெட் வாஷம் ஹோலோகாஸ்ட் நினைவிடத்துக்குச் சென்றார்.

அதைத்தொடர்ந்து தியோடர் ஹெர்சல் நினைவகத்துக்கு திடீர் வருகை புரிந்தார். பின்னர் இருநாட்டு பிரதமர்களும் கூட்டாக ஊடகவியலாளர்களைச் சந்தித்தனர்.

அப்போது பேசிய பிரதமர் மோடி, மனிதம் மற்றும் நாகரிக மதிப்பு இருக்கும் ஒவ்வொருவரும் தீவிரவாதம், வன்முறைக்கு எதிராகப் போராட முன்வரவேண்டும். அதற்கான காலம் இது என்று தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-



உலகத்தையே உலுக்கி வரும் தீவிரவாதத்தை முற்றிலுமாக ஒழிக்க ஒன்றுசேர வேண்டும்.

தீவிரவாத தாக்குதலுக்கு உள்ளானதற்கு யெட் வாஷம் ஓர் உதாரணம் என்றும் மோடி தெரிவித்துள்ளார்.

மேலும், யெட் வாஷம் தாக்குதலில் உயிரிழந்த 6 லட்சம் யூதர்களுக்கு மரியாதை செலுத்தினார். மேலும் அந்த தாக்குதலுக் காரணமான தீவிரவாதத்துக்கு எதிராகப் போராட வேண்டும். அதற்காக நாம் ஒன்றுபட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, இந்தியப் பிரதமரை வரவேற்க 70 ஆண்டுகள் காத்திருந்தோம் என பிரதமர் நரேந்திர மோடியிடம் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு பெருமிதம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நாள், இந்திய பிரதமருக்காக 70 ஆண்டுகள் காத்திருந்தோம். எனது நண்பரை இங்கு சந்தித்ததில் மகிழ்ச்சி அடைகிறேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# அவசரமாகக் கூடியது ஐ.நா. பாதுகாப்புச் சபை!



## வட கொரியாவுக்கு எதிராகப் புதிய தடைகள்?

வொஷிங்டன், ஜூலை 06

கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனையை வடகொரியா நடத்தியுள்ளதையடுத்து, இது தொடர்பாக விவாதிக்க ஐ.நா. பாதுகாப்புச் சபை நேற்று அவசரமாகக் கூடியுள்ளது.

பல்வேறு நாடுகளின் எதிர்ப்புகளையும் மீறி, கண்டம் விட்டுக் கண்டம் பாய்ந்து எதிரிகளின் இலக்கைக் குறிவைத்து அழிக்கும் ஏவுகணை மற்றும் ரொக்கெட் எஞ்சின்களைச் சோதனை செய்யும் வட கொரியா, சமீபத்தில் புதிய ஏவுகணை ஒன்றைச் சோதனை செய்தது.

வடக்கு பியாங்கன் மாகாணத்தில் உள்ள பாங்யான் என்ற இடத்திலிருந்து சுமார் 930 கி.மீ பாய்ந்து சென்று இலக்கை குறிவைத்துத் தாக்கக்கூடிய ஏவுகணையை வடகொரியா பரிசோதித்துள்ளது.

இந்தச் சோதனையை அந்த நாட்டு ஜனாதிபதி கிம் ஜான் உன் நேரில் பார்வையிட்டார். அத்தோடு, அமெரிக்கர்களுக்கு சுதந்திர தின பரிசு என்றும் தெரிவித்திருந்தார்.

வடகொரியாவின் இந்த நடவடிக்கைக்கு ஐ.நா. சபை பொதுச்செயலாளர் மற்றும் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஆகியோர் கண்டனம் தெரிவித்திருந்தனர். குறிப்பாக, வட கொரியாவின் தொடர் நடவடிக்கைகள் அமெரிக்காவை கோபத்தில் ஆழ்த்தியுள்ளது.

இதனால், ஐ.நா. பாதுகாப்பு சபையை உடனே கூட்டி இந்த விவகாரம் தொடர்பாக விவாதிக்கவேண்டும் என வெள்ளை மாளிகை தெரிவித்திருந்தது.

இதையடுத்து, வட கொரியாவின் தொடர் ஏவுகணை சோதனை தொடர்பாக விவாதிக்க ஐ.நா. பாதுகாப்புச் சபை நேற்று அவசரமாகக் கூடியது. அமெரிக்கா, சீனா, ரஷ்யா, பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் ஆகிய ஐந்து நாடுகளும் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினர்களாக உள்ளன.

மேற்கண்ட நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் ஐ.நா. தலைவர் அண்டோனியா கட்ரஸ் இந்த அவசர கூட்டத்தில் பங்கேற்றுள்ளனர்.

ஏற்கனவே, வட கொரியா மீது பல்வேறு பொருளாதாரத் தடைகளை ஐ.நா. விதித்திருந்தாலும், தற்போது மேலும் சில அதிரடி நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

# வட கொரியாவின் எந்த மிரட்டலையும் முறியடிக்க தயாராக இருக்கிறோம்!

### அமெரிக்க ராணுவ தலைமையகம்

வொஷிங்டன், ஜூலை 06

புதிதாக சோதிக்கப்பட்ட ஏவுகணை அமெரிக்காவுக்கு சுதந்திர தின பரிசு என வட கொரிய அதிபர் கூறியிருந்த நிலையில், எந்த வகையான மிரட்டலையும் முறியடிக்க தயாராக இருக்கிறோம் என அமெரிக்க இராணுவத் தலைமையகமான பெண்டகன் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், வட கொரியாவுக்கு பதிலளிக்கும் விதமாக பேட்டியளித்துள்ள அமெரிக்க இராணுவத் தலைமையகமான பெண்டகனின் செய்தித் தொடர்பாளர் டானா ஒயிட் தெரிவித்தவை வருமாறு:-

வடகொரியாவின் வளர்ந்துவரும் அச்சுறுத்தலுக்கு எதிராக எங்கள் கட்டுப்பாட்டில் உள்ள திறன்களை முழு அளவில் பயன்படுத்துவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

மேலும், எங்கள் நட்பு நாடுகளான, தென்கொரியா மற்றும் ஜப்பான் ஆகியவற்றின் பாதுகாப்பிற்கான எங்கள் உறுதிப்பாட்டில் மாற்றம் இல்லை.

எவ்வித அச்சுறுத்தலையும் முறியடிக்கத் தயாராக இருக்கிறோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கு இடையேயான உரசலால் சில மாதங்களாக அமைதி நிலவி வந்த கொரிய தீபகற்பத்தில், தற்போது மீண்டும் போர்ப் பதற்றம் தொற்றிக் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# கட்டாருக்கான கோரிக்கைகள் நடைமுறைக்கு ஒத்துவராதவை!

### அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் தகவல்



டோகா, ஜூலை 06

கட்டாருக்கு விதிக்கப்பட்ட கோரிக்கைகள் நடைமுறைக்கு ஒத்துவராத ஒன்றாக இருக்கின்றன என அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சவூதிஅரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், பக்ரைன், எகிப்து ஆகிய 4 நாடுகள் கட்டாருடனான உறவை கடந்த மாதம் 5 ஆம் திகதி முதல் முறித்துக்கொண்டன.

தீவிரவாதிகளுக்கு மறைமுகமாக பணஉதவி செய்வதாகவும், எதிரிநாடான ஈரானுடன் உறவு வைத்திருப்பதாகவும் கூறி கட்டாருக்கு இந்தத் தடைவிதிக்கப்பட்டது.

மேலும் கட்டாரில் இருந்து மேற்கண்ட நாடுகளின் தூதர்களும் அந்தந்த நாடுகளுக்கு திரும்பினர்.

மேலும், கட்டார்விமானங்கள் அந்தந்த நாட்டின் வான் எல்லையில் பறக்கதடைவிதிக்கப்பட்டுள்ளது. கப்பல் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டது. இதனால், கட்டார்பொருளாதார ரீதியில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியில் குவைத் மன்னர் ஈடுபட்டுள்ள நிலையில், சவூதிஅரேபியாவும், அதன் நட்பு நாடுகளும் கட்டாருக்கு 13 கோரிக்கைகளை முன்வைத்தன.

அதில் எகிப்தில் சகோதரத்துவ கட்சிக்கு வழங்கும் ஆதரவை கட்டார் நிறுத்த வேண்டும். அல்-ஜசீரா டி.வி.யை மூடவேண்டும். ஈரானுடனான தூதரக உறவை குறைக்க வேண்டும். கட்டாரில் இயங்கும் துருக்கி ராணுவ முகாமை மூட வேண்டும் என்பன முக்கிய கோரிக்கைகளாகும்.

இவற்றை ஏற்றுக்கொள்ள கட்டாருக்கு 10 நாள் கெடு விதிக்கப்பட்டு இருந்தன. 10 நாள்கள் முடிந்தும் கட்டார் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை மேலும், காலக் கெடுவை நீட்டிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தது.

இதை ஏற்றுக்கொண்ட நட்பு நாடுகள், கட்டாருக்கு 2 நாள்களை கெடுவாக நீடித்தன.

இந்த நிலையில், கட்டாரின் நட்பு நாடுகளின் கோரிக்கை நடைமுறைக்கு ஒத்துவராத ஒன்றாக இருக்கிறது. அதேபோல் நடவடிக்கை எடுக்க முடியாத ஒன்றாகவும் இருப்பதாக கட்டாரின் வெளியுறவுத் துறை அமைச்சர் ஷேக் மொகமது பின் அப்துல்ரகுமான் அல்தானி தெரிவித்துள்ளார்.

அத்துடன், இது தீவிரவாதம் தொடர்பானது அல்ல. பேச்சு சுதந்திரத்துக்கு எதிராக இருக்கிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# 2030 இல் வியட்நாம் தலைநகரில் மோட்டார் சைக்கிள்களுக்குத் தடை!



ஹனோய், ஜூலை 06

வியட்நாமில் சுற்றுச்சூழல் மாசுபடுவதைக் கட்டுப்படுத்தும் விதமாக, எதிர்வரும் 2030 ஆம் ஆண்டுக்குள் மோட்டார் சைக்கிள்களுக்குத் தடை விதிக்க அந்நாட்டு தலைநகர் நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

வியட்நாம் தலைநகர் ஹனோய் 10 பெருநகர மாவட்டங்கள் மற்றும் 19 புறநகர் மாவட்டங்களைக் கொண்டது. இங்கு 75 லட்சம் மக்கள் வசிக்கின்றனர்.

ஆனால், 50 லட்சத்துக்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 5 லட்சம் கார்கள் உள்ளன. இதனால், போக்குவரத்து நெரிசலுடன் சுற்றுச்சூழல் மாசுபடுவதும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

எனவே, அதற்கு முடிவு கட்டும் வகையில் ஹனோய் நகரநிர்வாகம் அதிரடி முடிவை மேற்கொண்டுள்ளது.

அதன்படி, எதிர்வரும் 2030 ஆம் ஆண்டுக்குள் ஹனோய் நகரில் மோட்டார் சைக்கிள்களுக்கு தடை விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இது படிப்படியாக நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

இது குறித்து ஆலோசிக்க மாவட்ட ஆட்சியாளர்கள் கூட்டம் நடந்தது. அதில் 96 பேரில் 95 பேர் ஒப்புதல் அளித்துள்ளனர். மோட்டார் சைக்கிள் தடை குறித்த தகவல் இணையத்தளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

அதில் போக்குவரத்து நெரிசல், எதிர்காலத்தில் காற்று மாசுபடுவதைத் தடுக்க இத்தகைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனக் கூறப்பட்டுள்ளது.

அதேநேரம் பொது போக்குவரத்து சேவைகளை மேம்படுத்தத் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கூடைப்பந்தில் யாழில் தமது பலத்தை நிரூபித்தது சென்றலைட்ஸ் அணி




யாழ்ப்பாணம், ஜூலை 06

யாழ்ப்பாணம் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 98 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியில் நடத்தப்பட்ட கூடைப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை வெற்றி கொண்ட சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி சம்பியன் கிண்ணத்தை வென்றுள்ளது.

இரு பாலாருக்குமான இந்தப் போட்டித் தொடரின் முதல் சுற்றுப் போட்டி நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒரு குழுவில் இரண்டு அணிகள் அங்கம் வகித்து போட்டிகள் இடம்பெற்றன. அதில் வெற்றி பெறும் முறைக்கு ஏற்ப அனைத்து அணிகளும் அடுத்த சுற்றான காலிறுதியில் மோதின.

யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இரண்டு நாள்களாக இடம்பெற்ற இந்த சுற்றுப் போட்டியில் ஆண்கள் பிரிவில் 8 அணிகளும், பெண்கள் பிரிவில் 6 அணிகளும் பங்கு பற்றுவதாக இருந்தன. எனினும், பெண்கள் பிரிவில் இரண்டு அணிகளும், ஆண்கள் பிரிவில் ஒரு அணியும் பங்கெடுக்கவில்லை.

முதல் சுற்று முடிவுகளுக்கு அமைய முதலாவது காலிறுதியில் பற்றீசியன்ஸ் மற்றும் சென்றலைட்ஸ் அணிகள் மோதின. இதில் சென்றலைட்ஸ் அணி 47:28 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அடுத்த காலிறுதியில் யாழ். பல்கலைக்கழக அணிக்கு வோக் ஓவர் முறையில் போட்டி இன்றி வெற்றி கிடைத்தது.

அதற்கு அடுத்த காலிறுதியில் KCCC (கொக்குவில் மத்திய சனசமூக நிலையம்) அணியினர், ஸ்கந்தா ஸ்ரார் அணியை 58:31 என வெற்றிகொண்ட அதே வேளை, ஜொலிஸ்ரார் அணி 55:51 என்ற புள்ளிகள் அடிப்படையில் காங்கேசந்துறை அணியினரை வீழ்த்தி அரையிறுதிக்குத் தெரிவாகியது.

காலிறுதிப் போட்டிகளைத் தொடர்ந்து, அச்சுற்றில் வெற்றி பெற்ற அணிகள் தீர்மானம்மிக்க அரையிறுதியில் மோதின. அரையிறுதிப் போட்டிகள் அனைத்தும் மிகவும் விறுவிறுப்பாகச் சென்றன.

அதன்படி, முதலாவது அரையிறுதியில் சென்றலைற்ஸ் மற்றும் யாழ். பல்கலைக்கழக அணிகள் மோதின. அதில், முன்னைய போட்டிகளிலும் சிறந்த முறையில் விளையாடியிருந்த இவ்விரு அணிகளும் கடுமையாக மோதிக்கொண்டன.

இதில், சென்றலைட்ஸ் வீரர்கள் முதல் மூன்று காற்பகுதி நேர ஆட்டங்களையும் முறையே 33-10, 23-14, 20-14 என வெற்றி கொண்டனர். எனினும், இறுதி காற்பகுதி நேர ஆட்டத்தை யாழ். பல்கலை வீரர்கள் 31-13 என அபாரமாக வெற்றி கொண்டனர். அவ்வாறிருந்த போதும் மொத்தப் புள்ளிகளின்படி 89:69 என சென்றலைட்ஸ் வீரர்கள் அரையிறுதியை வெற்றி கொண்டு இறுதிப் போட்டிக்குத் தெரிவாகினர்.

அதேபோன்று, ஜொலிஸ்ரார் மற்றும் KCCC அணியினருக்கு இடையில் நடந்த மற்றைய அரையிறுதியின் முதல் காற்பகுதியை KCCC வீரர்கள் 20:13 எனக் கைப்பற்றினர்.

எனினும், அடுத்த காற்பகுதியில் சிறந்த முறையில் செயற்பட்ட ஜொலிஸ்ரார் வீரர்கள் 23 புள்ளிகளைப் பெற்ற அதேநேரம் எதிரணிக்கு 05 புள்ளிகளை மாத்திரமே விட்டுக்கொடுத்தனர்.

எனினும், அவர்கள் மூன்றாவது மற்றும் இறுதி காற்பகுதிகளை முறையே 21:23, 18:20 என இழந்தாலும், இரண்டாவது காற்பகுதியில் பெற்ற அதிகமான புள்ளிகளின் உதவியால் 75:68 என்ற மொத்தப் புள்ளிகள் கணக்கில் வெற்றி கொண்டு இறுதிப் போட்டிக்குத் தெரிவாகினர்.

இதன்படி கிண்ணத்திற்கான சொந்தக்காரர்களைத் தெரிவு செய்வதற்கான இறுதிப் போட்டி மின் ஒளியின் கீழ் பெரும் எண்ணிக்கையிலான பார்வையாளர்களது வருகைக்கு மத்தியில் இடம்பெற்றது.

பலம் மிக்க இரு அணிகளான சென்றலைட்ஸ் மற்றும் ஜொலிஸ்ரார் அணிகள் மோதிக்கொண்ட இந்தப் போட்டியின் முதல் கால் பகுதி ஆட்டத்தில் அபாரம் காட்டிய சென்றலைட்ஸ் வீரர்கள் 29:6 என்ற புள்ளி கள் கணக்கில் குறித்த பகுதியை தன்னகப்படுத் தினர்.

அதன் பின்னர் இடம்பெற்ற இரண்டு காற்பகுதிகளிலும் எதிரணி வீரர்களின் ஆட்டத்தை ஜொலிஸ்ரார் அணியினர் ஈடு கொடுத்து விளையாடினாலும், சென்றலைட்ஸ் வீரர்கள் 21:18 மற்றும் 28:23 என வெற்றி கொண்டனர்.

மீண்டும் அபாரம் காட்டிய சென்றலைட்ஸ் வீரர்கள் இறுதிக் காற்பகுதியையும் 22:08 என வெற்றி கொண்டு இறுதிப் போட்டியை 100:55 எனக் கைப்பற்றினர்.

இதனால், அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 98 ஆவது ஆண்டு நிறைவு விழாவுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூடைப்பந்தாட்டப் போட்டியில் சென்றலைட்ஸ் அணியினர் சம்பியன்களாகத் தெரிவாகினர்.

## தெரிவுக் குழுவின் பதவிக் காலம் மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிப்பு!

கொழும்பு, ஜூலை 06

இலங்கை கிரிக்கெட் தெரிவுக் குழுவில் எவ்வித மாற்றமும் இல்லை எனவும், சனத் ஜயசூரிய தலைமையிலான தெரிவுக் குழுவினர் தொடர்ந்து ஆறு மாதங்களுக்கு பதவி வகிப்பர் எனவும் ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனம் அறிவித்துள்ளது.

தெரிவுக் குழுவின் பதவிக் காலம் கடந்த மாதம் 30ஆம் திகதியுடன் நிறைவு பெற்றிருந்தது.

இந்த நிலையில், இதே குழுவினர் தொடர்ந்தும் தெரிவாளர்களாக பதவி வகிப்பதற்கு விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர அங்கீகாரம் வழங்கியுள்ளமையுடன், அவர்களது பதவிக் காலம் எதிர் வரும் டிசெம்பர் 31 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

## அமில அபொன்சோ லஹிறு மதுசங்க நீக்கம்!

கொழும்பு, ஜூலை 06

நேற்று முன்தினம் தமது பதவிக் காலத்தில் நீடிப்பைப் பெற்றுக்கொண்ட இலங்கை கிரிக்கெட் அணியின் தேர்வாளர்கள், ஸிம்பாப்வே அணியுடனான எஞ்சியுள்ள மூன்று ஒரு நாள் போட்டிகளுக்குமான இலங்கை அணியை அறிவித்துள்ளனர்.

ஸிம்பாப்வேயுடனான முதல் இரண்டு ஒரு நாள் போட்டிகளிற்கும் அணியில் இணைக்கப்பட்டிருந்த சகலதுறை ஆட்டக்காரரான லஹிறு மதுசங்க மற்றும் இடது கை சுழல் வீரரான அமில அபொன்சோ ஆகியோர் அடுத்த மூன்று போட்டிகளுக்குமான இலங்கை அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

சகலதுறை வீரரான லஹிறு மதுசங்க ஸிம்பாப்வே அணியுடனான முதலாவது ஒரு நாள் போட்டியில், ஒரு பந்தை மாத்திரம் எதிர்கொண்டிருந்ததோடு, அதிகளவிலான ஓட்டங்களை எதிரணிக்கு வாரி வழங்கும் விதத்தில் இரண்டு ஓவர்களையும் வீசியிருந்தார்.

அதேபோன்று, அமில அபொன்சோவும் 8.4 ஓவர்களில் 77 ஓட்டங்களை வழங்கியிருந்தார். இதன் காரணமாக, இந்த இரண்டு வீரர்களும் ஸிம்பாப்வே அணிக்கெதிரான இரண்டாவது ஒரு நாள் போட்டியில் விளையாட அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை.

தற்பொழுது அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ள இவர்களுக்குப் பதிலாக, சுரங்க லக்மால் மற்றும் சாமர கபுகெதர ஆகியோருக்கு அணியில் வாய்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது. இந்த இரண்டு வீரர்களும், காலியில் இடம்பெற்றிருந்த இரண்டாவது ஒரு நாள் போட்டிக்கு முன்னர் குசல் மெண்டிஸ் மற்றும் லசித் மாலிங்க ஆகியோருக்கு வைரஸ் காய்ச்சல் ஏற்பட்டதையடுத்தும் அணியில் இணைக்கப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணியில் வைரஸ் காய்ச்சல் காரணமாகப் பாதிக்கப்பட்டிருந்த வீரர்களான மலிங்க, மெண்டிஸ், குனரத்ன மற்றும் சந்தகன் ஆகியோர் தற்போது பூரண சுகத்தை பெற்று மூன்றாவது ஒரு நாள் போட்டிக்கான பயிற்சிகளில் கலந்துகொண்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எஞ்சிய மூன்று போட்டிகளுக்குமான இலங்கை அணியில் இடம்பிடித்துள்ள வீரர்களின் விவரம் வருமாறு:-

நிரோஷன் திக்வெல்ல, தனுஷ்க குணதிலக்க, குசல் மெண்டிஸ், உபுல் தரங்க, அஞ்செலோ மெதிவ்ஸ் (அணித் தலைவர்), அசேல குணரத்ன, வனிந்து ஹஸரங்க, துஷ்மந்த சமீர, லக்ஷன் சந்தகன், லசித் மலிங்க, நுவான் பிரதீப், சுரங்க லக்மால், அகில தனஞ்ஜய, சாமர கபுகெதர



# கூடைப்பந்தில் யாழில் தமது பலத்தை நிரூபித்தது சென்றலைட்ஸ் அணி




யாழ்ப்பாணம், ஜூலை 06

யாழ்ப்பாணம் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 98 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியில் நடத்தப்பட்ட கூடைப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை வெற்றி கொண்ட சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி சம்பியன் கிண்ணத்தை வென்றுள்ளது.

இரு பாலாருக்குமான இந்தப் போட்டித் தொடரின் முதல் சுற்றுப் போட்டி நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒரு குழுவில் இரண்டு அணிகள் அங்கம் வகித்து போட்டிகள் இடம்பெற்றன. அதில் வெற்றி பெறும் முறைக்கு ஏற்ப அனைத்து அணிகளும் அடுத்த சுற்றான காலிறுதியில் மோதின.

யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இரண்டு நாள்களாக இடம்பெற்ற இந்த சுற்றுப் போட்டியில் ஆண்கள் பிரிவில் 8 அணிகளும், பெண்கள் பிரிவில் 6 அணிகளும் பங்கு பற்றுவதாக இருந்தன. எனினும், பெண்கள் பிரிவில் இரண்டு அணிகளும், ஆண்கள் பிரிவில் ஒரு அணியும் பங்கெடுக்கவில்லை.

முதல் சுற்று முடிவுகளுக்கு அமைய முதலாவது காலிறுதியில் பற்றீசியன்ஸ் மற்றும் சென்றலைட்ஸ் அணிகள் மோதின. இதில் சென்றலைட்ஸ் அணி 47:28 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அடுத்த காலிறுதியில் யாழ். பல்கலைக்கழக அணிக்கு வோக் ஓவர் முறையில் போட்டி இன்றி வெற்றி கிடைத்தது.

அதற்கு அடுத்த காலிறுதியில் KCCC (கொக்குவில் மத்திய சனசமூக நிலையம்) அணியினர், ஸ்கந்தா ஸ்ரார் அணியை 58:31 என வெற்றிகொண்ட அதே வேளை, ஜொலிஸ்ரார் அணி 55:51 என்ற புள்ளிகள் அடிப்படையில் காங்கேசந்துறை அணியினரை வீழ்த்தி அரையிறுதிக்குத் தெரிவாகியது.

காலிறுதிப் போட்டிகளைத் தொடர்ந்து, அச்சுற்றில் வெற்றி பெற்ற அணிகள் தீர்மானம்மிக்க அரையிறுதியில் மோதின. அரையிறுதிப் போட்டிகள் அனைத்தும் மிகவும் விறுவிறுப்பாகச் சென்றன.

அதன்படி, முதலாவது அரையிறுதியில் சென்றலைற்ஸ் மற்றும் யாழ். பல்கலைக்கழக அணிகள் மோதின. அதில், முன்னைய போட்டிகளிலும் சிறந்த முறையில் விளையாடியிருந்த இவ்விரு அணிகளும் கடுமையாக மோதிக்கொண்டன.

இதில், சென்றலைட்ஸ் வீரர்கள் முதல் மூன்று காற்பகுதி நேர ஆட்டங்களையும் முறையே 33-10, 23-14, 20-14 என வெற்றி கொண்டனர். எனினும், இறுதி காற்பகுதி நேர ஆட்டத்தை யாழ். பல்கலை வீரர்கள் 31-13 என அபாரமாக வெற்றி கொண்டனர். அவ்வாறிருந்த போதும் மொத்தப் புள்ளிகளின்படி 89:69 என சென்றலைட்ஸ் வீரர்கள் அரையிறுதியை வெற்றி கொண்டு இறுதிப் போட்டிக்குத் தெரிவாகினர்.

அதேபோன்று, ஜொலிஸ்ரார் மற்றும் KCCC அணியினருக்கு இடையில் நடந்த மற்றைய அரையிறுதியின் முதல் காற்பகுதியை KCCC வீரர்கள் 20:13 எனக் கைப்பற்றினர்.

எனினும், அடுத்த காற்பகுதியில் சிறந்த முறையில் செயற்பட்ட ஜொலிஸ்ரார் வீரர்கள் 23 புள்ளிகளைப் பெற்ற அதேநேரம் எதிரணிக்கு 05 புள்ளிகளை மாத்திரமே விட்டுக்கொடுத்தனர்.

எனினும், அவர்கள் மூன்றாவது மற்றும் இறுதி காற்பகுதிகளை முறையே 21:23, 18:20 என இழந்தாலும், இரண்டாவது காற்பகுதியில் பெற்ற அதிகமான புள்ளிகளின் உதவியால் 75:68 என்ற மொத்தப் புள்ளிகள் கணக்கில் வெற்றி கொண்டு இறுதிப் போட்டிக்குத் தெரிவாகினர்.

இதன்படி கிண்ணத்திற்கான சொந்தக்காரர்களைத் தெரிவு செய்வதற்கான இறுதிப் போட்டி மின் ஒளியின் கீழ் பெரும் எண்ணிக்கையிலான பார்வையாளர்களது வருகைக்கு மத்தியில் இடம்பெற்றது.

பலம் மிக்க இரு அணிகளான சென்றலைட்ஸ் மற்றும் ஜொலிஸ்ரார் அணிகள் மோதிக்கொண்ட இந்தப் போட்டியின் முதல் கால் பகுதி ஆட்டத்தில் அபாரம் காட்டிய சென்றலைட்ஸ் வீரர்கள் 29:6 என்ற புள்ளி கள் கணக்கில் குறித்த பகுதியை தன்னகப்படுத் தினர்.

அதன் பின்னர் இடம் பெற்ற இரண்டு காற்பகுதிகளிலும் எதிரணி வீரர்களின் ஆட்டத்தை ஜொலிஸ்ரார் அணியினர் ஈடுகொடுத்து விளையாடினாலும், சென்றலைட்ஸ் வீரர்கள் 21:18 மற்றும் 28:23 என வெற்றி கொண்டனர்.

மீண்டும் அபாரம் காட்டிய சென்றலைட்ஸ் வீரர்கள் இறுதிக் காற்பகுதியையும் 22:08 என வெற்றி கொண்டு இறுதிப் போட்டியை 100:55 எனக் கைப்பற்றினர்.

இதனால், அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 98 ஆவது ஆண்டு நிறைவு விழாவுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூடைப்பந்தாட்டப் போட்டியில் சென்றலைட்ஸ் அணியினர் சம்பியன்களாகத் தெரிவாகினர்.

## இனவாதத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடமளிக்கப்போவதில்லை எனவும் சுட்டிக்காட்டி னார்.

இதேவேளை, அளுத்கம, தர்ஹாநகர் சம்பவத்தில் பாதிக்கப்பட்டோருக்கும் சொத்து சேதங்களுக்கும் உரிய நஷ்ட ஈடுகள் வழங்கப்பட்டுள்ளன எனவும், சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் சபையில் தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அதற்கு மேலதிகமாக அப்பிரதேசத்தில் விசேட அதிரடிப்படையினரின் நிரந்தர முகாமொன்றும் அமைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று செவ்வாய்க்கிழமை சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடியது. சபாநாயகர் அறி விப்பு, பொதுமனுத் தாக்கல் என்பன நிறைவடைந்ததன் பின்னர் பிரதமரிடம் நேரடி கேள்வி – பதில் சுற்று ஆரம்பமானது.

இதன்போது ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

“நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இன மற்றும் அடிப்படைவாதங்களைப் பரப்பும் வகையில் திட்டமிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இவற்றை தடுக்கவும், நாட்டில் சட்ட, ஒழுங்கைப் பாதுகாக்கவும் அரசால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன? அதே போல், 2014ஆம் ஆண்டு அளுத்கம தர்ஹாநகர் சம்பவத் தில் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பில் அரசால் இதுவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை கள் என்ன?” என்று மரிக்கார் எம்.பி. இதன்போது கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் –

“சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் என அனைத்து இன மக்களுக்குமிடையிலான ஒற்றுமையின் நிமித்தம் எமது அரசு ஆட்சிக்கு வந்ததிலிருந்து அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவருகின்றது. கடந்த காலங்களில் (மஹிந்த ஆட்சிக் காலத்தில்) திட்டமிட்ட இன மற்றும் அடிப்படைவாத நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்தன. அரசின் அனுசரணை இல்லாமல் அவை அப்போது இடம்பெற்றிருக்கவில்லை. எனினும், நாம் ஆட்சிக்கு வந்ததும் அவற்றை நிறுத்தவும் அமைதியை நிலைநாட்டவும் சகல நடவடிக்கைகளையும் எடுத்திருந்தோம்.

காணாமற்போனோர் பற்றி அலுவலகம் ஸ்தாபிப்பு, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையிலான தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகம் மற்றும் நல்லிணக்க பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான செயலகம் எனப் பல்வேறு நடவடிக்கைகள் எமது அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நல்லிணக்கத்தையும் மத ஒற்றுமையையும் ஏற்படுத்தவே நாம் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

இன மற்றும் அடிப்படைவாத செயற்பாடுகளால் கடந்த ஆட்சியின்போது அனுசரணை வழங்கப்பட்டிருந்தது. எனினும், இம்முறை அவ்வாறான அனுசரணைகிடைக்கவில்லைஎன்பதே இங்குள்ள வித்தியாசம். மக்கள் இதற்கு ஆதரவளிப்பதில்லை.

அதிகாரத்துக்கு வர முயற்சிப்பவர்களே இனவாதத்துக்கு அர்த்தம் கற்பிக்கப் பார்க்கின்றனர். இன மற்றும் அடிப்படைவாதங்களைத் தூண்டிவிட்டு குறுகிய அரசியல் இலாபத்தைப் பெற்றுக்கொள்வதே இவர்களது நோக்கமாகும். எவ்வாறிருப்பினும், இன மற்றும் அடிப்படைவாதச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் சிலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் விசாரணைகள் முடிவடையும் வரை பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

### ஊடகங்கள் சிலவும் இனவாதத்தைத் தூண்டுகின்றன

இதேநேரம், ஊடகங்கள் சிலவும் இந்த இனவாதத்தைத் தூண்டிவிடும் வகையில் செயற்படுகின்றன. சிலர் இதற்கு ஆதரவாக பேசினாலும் பெரும்பாலானோர் இதை ஆதரிப்பதில்லை. இருப்பினும், இன மற்றும் அடிப்படைவாதங்களைத் தூண்டிவிடுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. பொலிஸாரால் இது தொடர்பில் ரோந்து உள்ளிட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இனங்களுக்கிடையே ஒற்றுமையைப் பேணுவதற்கு மக்களிடம் தகவல்களைப் பெற்றுதேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பொலிஸ்மாஅதிபருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அளுத்கம, தர்ஹாநகர் சம்பவத்தில் பாதிக்கப்பட்டோருக்கும் சொத்து சேதங்களுக்கும் உரிய நட்டஈடுகள் வழங்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாக அப்பிரதேசத்தில் விசேட அதிரடிப்படையினரின் நிரந்தர முகாமொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

### நஷ்டஈடு கிடைக்கும்

முஸ்லிம் பள்ளிவாசல்களுக்கோஅல்லதுவிகாரைகளுக்கோ சேதம் ஏற்படும் பட்சத்தில் தகுந்த நஷ்டஈடுகளை வழங்குவதே எமது அரசின் கொள்கையாகும்.

இன மற்றும் அடிப்படைவாதங்களில் தொங்கி, குறுகிய அரசியல் இலாபம் தேட முயற்சிப்பவர்களுக்கு ஆதரவளிக்கக் கூடாது. அவ்வாறு ஆதரவளிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும். ஆகவே, இன மற்றும் அடிப்படைவாதங்களுக்கு இங்கு இடமளிக்கப்படமாட்டாது. அப்படியானவர்கள் இறுதியில் குப்பைக் கூடைக்குள்தூக்கியெறிப்பட்டமை தான் வரலாற்றுச் சான்றாகும்.

இதேநேரம், இன மற்றும் அடிப்படைவாதங்களுடன் சம்பந்தப்பட்ட சம்பவங்களால் பாதிக்கப்பட்டவர்கள் இருந்தால் ஆராய்ந்து நட்டஈடு வழங்கப்படும்” – என்றார். (உ)

## திருடர்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலந்.துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்–

“அமைச்சரவைக் கூட்டத்தின்போது, திருடர்களைப் பிடிப்பதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்தையும், பொலிஸ் திணைக்களத்தையும் தனக்கு 3 மாதங்களுக்கு வழங் குமாறு ஜனாதிபதி கோரிக்கை விடுத்தார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இவ்விரு திணைக்களங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களின் செயற்பாடுகள் மீது திருப்தி இல்லை என்பதையும், அவர்கள் திருடர்களைப் பாதுகாக்கின்றனர் என்பதையுமே ஜனாதிபதியின் கருத்து வெளிப்படுத்துகின்றது.

எனவே, இவ்விரு அமைச்சுக்களையும் (நீதி, சட்டம் ஒழுங்கு) ஜனாதிபதி தனக்குக் கீழ் கொண்டுவரவேண்டும். அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் இதற்கு இடமிருக்குமோ தெரியவில்லை.

எது எப்படியோ திருடர்களை இந்த அரசு பாதுகாத்து வருகின்றது. ஊழல்களைத் தடுப்பதற்குரிய நடவடிக்கை எதுவும் இல்லை. திருடர்களுடன் அமர்ந்திருப்பது திருடர்களைப் பாதுகாப்பதற்கு ஒப்பான செயலாகும்” – என்றார். (உ)

## யுத்தக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமைப்போ படையினர்மீதுகை வைக்க முடியாத நிலையை நாம்ஏற்படுத்தியிருக்கின்றோம்’

–இவ்வாறு, படையினரைப் பாதுகாத்த பெருமையை மார்தட்டிக் கூறினார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

இவ்வாறான நிலையில், கீழ்த்தரமான அரசியல் சதிகள் மூலம் எவரும் நாட்டில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியாது என்றும் அவர் உறுதிபடத் தெரிவித்தார்.

படைநடவடிக்கைகளின்போது உயிரிழந்த மற்றும் அங்கவீனமடைந்த முப்படையினர், பொலிஸார் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையினரின் குடும்பங்களுக்கு வீடுகளை வழங்கும் ’விருசுமித்துறு’ வீடமைப்புத் திட்டத்தின் முதற் கட்டமாக 192 வீடுகள் வழங்கும் நிகழ்வு நேற்று அலரி மாளிகையில் நடைபெற்றது.

அந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்–

ஆட்சியில் இருந்தபோது மக்களின் கோடிக்கணக்கான ரூபா பணத்தையும், அரச சொத்துக்களையும் கொள்ளையடித்து அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி பெரும் ஊழல், மோசடி மற்றும் குற்றம் புரிந்தோர் மீண்டும் ஆட்சிக்கு வரப்போவதாக மக்களுக்கு காட்ட முயற்சிக்கின்றனர்.

அந்த முயற்சியில் ஒருபோதும் வெற்றிபெறாது. இன்று போல் நாளையும் நாட்டுக்கு தேவையான செயற்றிட்டங்களைதற்போதைய அரசாங்கம் முறையாக அமுல்படுத்துகின்றது.

நாட்டின் இறைமைக்கும், ஒருமைப்பாட்டுக்காகவும் வீரமிகுபடையினர்ஆற்றிய அர்ப்பணிப்புகளால் நாடும் மக்களும்பெற்ற வெற்றியை உறுதிப்படுத்தி முன்னோக்கி செல்வதே இன்று தேவையாக இருக்கின்றது.

நாட்டில் நிலையான சமாதானத்தின்மூலம்தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கு தற்போதைய அரசு பாடுபட்டு வருகின்றது. இதன்போது எதிர்காலத்தில் ஆட்சிக்கு வர கனவு காணும் சில சந்தர்ப்பவாத அரசியல்வாதிகள் நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.

அந்தச் சதிகளை தோற்கடிப்பதற்கு நாட்டு மக்கள் அனைவரும் அணிதிரள வேண்டும். – என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ம)

## மகாநாயக்கர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
புடைய வட்டாரங்கள் நேற்று மாலை ‘காலைக்கதிருக்கு’த் தெரிவித்தன.

அஸ்கிரிய மற்றும் மல்வத்தை மகாநாயக்கர்களையே ஜனாதிபதி நேற்றுச் சந்திக்க முயன்றார் என்றும் –

நேற்று சந்திப்பு இடம்பெற்றதா என்பதை அறிய முடியவில்லை என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன்.

எது, எப்படியென்றாலும் அத்தகைய சந்திப்புகள் இடம்பெற்றால் அது பற்றிய விவரம் 24 மணி நேரத்துக்குள் வெளியாகும் என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் குறிப்பிட்டன. (உ)

## தலைமன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
லையில்அகழ்வுப்பணிகள் இடம்பெற்றன. எனினும் எந்தவொரு தடயப் பொருளும் மீட்கப்படவில்லை.

தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள கைத்தொழில் பேட்டைக்கு அருகிலுள்ள கழிவு நீர் செல்லும் மதகிலிருந்து மண்டையோடு ஒன்று மீட்கப்பட்டது.

மன்னார் பொலிஸார் கடந்த திங்கட்கிழமை அந்த இடத்திற்கு சென்று பார்வையிட்டதுடன் மன்னார் நீதிமன்றின் கவனத்திற்கும் கொண்டு சென்றுள்ளனர்.

இந்த நிலையில் மன்னார் நீதிவானின் உத்தரவிற்கு அமைவாக நேற்றுப் பிற்பகல் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மன்னார் நீதிவான் ஏ.ஜீ. அலெக்ஸ்ராஜா முன்னிலையில் விசேட சட்ட வைத்திய அதிகாரி டபிள்யூ.ஆர்.ஏ.எஸ்.ராஜபக்ஸ, மன்னார் சட்ட வைத்திய அதிகாரி எம்.யு.எம்.சப்வான் ஆகியோரின் பங்களிப்புடன் அடையாளம் காணப்பட்ட பகுதியில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றன.

இருப்பினும், இந்த நடவடிக்கைகளின்போது வேறு எவ்வித தடயப் பொருள்களும் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ம)

## போர்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எமது இராணுவத்தின் பலம். எனினும், எமது இராணுவத்தினர் போர்க்குற்றம் புரிந்தமை உறுதிப்படுத்தப்பட்டால் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்’

– இவ்வாறு, புதிய இராணுவத் தளபதி மஹேஸ் சேனநாயக்க தெரிவித்தார்.

இராணுவத் தலைமையகத்தில் நேற்றுக் காலை தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட மஹேஸ் சேனநாயக்க,

ஒழுக்கமும்அர்ப்பணிப்புமே இலங்கை இராணுவத்தின் பலம். சீருடை அணிந்ததால் மாத்திரம் அந்த விடயம் நிறைவேறாது.

போர்க் குற்றம் சம்பந்தமாக இராணுவத்தினர் மீது குற்றம் சுமத்தப்படுகின்றது. குற்றம் புரியும் அணிகள் சம்பவங்கள் நடைபெற்ற சந்தர்ப்பத்தில் அங்கு இருந்தனவா என்பது சிக்கலுக்குரியது.

இராணுவத்தினர் அவ்வாறு போர்குற்றங்களைப்புரிபவர்கள் அல்லர். புதிய பதவியை ஏற்று சில மணி நேரம் பூர்த்தியாகியுள்ள நிலையில் மிகப் பெரிய பணி ஒன்றை என்னிடம் எதிர்பார்க்கின்றனர். இராணுவத் தளபதி என்ற வகையில் இது மிகப் பெரிய பொறுப்பு.

இராணுவத்தினர் நாட்டின் சட்டங்களுக்கு உட்பட்டவர்கள். இதனால், குறைந்தளவான குற்றங்களே இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டிருக்கும்.

எது எப்படி இருந்த போதிலும் ஏதோ ஒரு வகையில் போர்க் குற்றம் செய்திருந்தமை உறுதிப்படுத் தப்பட்டால், சம்பந்தப்பட்ட படையினர், அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். – என் றார். (ம)

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கள் கோரிக்கை விடுத்திருந்த நிலையிலேயே நாடாளுமன்றத்தில் நேற்று அதனை விவாதத்துக்கே எடுத்துக்கொள்ளாமல் கடைசி நேரத்தில் காரணம் காட்டாமல் தவிர்த்து தப்பிக் கொண்டது அரசு.

இந்தச் சட்டமூலம் மீது பிறிதொரு நாளில் விவாதம் நடத்தப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று சபையில் மொட்டையாகக் கூறி நாசூக்காய்ச் சமாளித்தார்.

நாடாளுமன்றம் நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது.

தினப்பணிகள் முடிவடைந்த பின்னர், வலுக்கட்டாயமாகக் காணாமல்போக்கப்படுவதிலிருந்து எல்லா ஆள்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேச சமவாய சட்டமூலம் மீது விவாதம் நடத்தப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. நாடாளுமன்ற ஒழுங்குப்பத்திரத்திலும் இது விடயம் இடம்பெற்றிருந்தது.

ஆயினும், இந்தச் சட்டமூலத்தை நிறைவேற்றுவதில் அவசரம் காட்ட வேண்டாம் என்றும் அதைத் தாமதப்படுத்துமாறும் மகாநாயக்க தேரர்கள், ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். அத்துடன், இச்சட்டமூலத்திலுள்ள சில பிரிவுகளுக்கு சில தரப்பினர் எதிர்ப்பும் வெளியிட்டிருந்தனர். மஹிந்த ராஜபக்‌ஷவின் கூட்டு எதிரணி முழுமையாகவே எதிர்த்திருந்தது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே சட்டமூலத்தை நிறைவேற்றுவதை அரசு தாமதப்படுத்தியுள்ளது.

ஒழுங்குப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அந்த விடயம் பிறிதொரு நாளில் இடம்பெறும் என்று அறிவித்தார் அதனை சபையில் சமர்ப்பிக்க வேண்டிய பிரதமர்.

### எதிர்பார்ப்பில் விழுந்தது மண்

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு உட்பட பல தரப்பினரும் இச்சட்டமூலம் நேற்று நிறைவேற்றப்படுவதுடன் காணாமலாக்கப்பட்டோரின் விவகாரம் சுமுகமாகக் கையாளப்படும் என எதிர்பார்த்திருக்கையில், அந்த எதிர்பார்ப்பில் இப்போது மண் விழுந்திருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குக் கூட முற்கூட்டித் தகவல் தராமல் இந்த விடயத்தை அரசு தள்ளிப்போட்டு ஒத்திவைத்திருக்கின்றமை கூட்டமைப்பின் தலைமையைக் கடும் விசனத்துக்குள்ளும் எரிச்சலுக்குள்ளும் ஆழ்த்தியிருப்பதாகத் தெரிகிறது.

பலவந்தமாக ஆள்களைக் காணாமல்போகச் செய்வதிலிருந்து பாதுகாக்கும் சர்வதேச சமவாயத்தில் இலங்கை 2015ஆம் ஆண்டு டிசெம்பர் 10ஆம் திகதி கையெழுத்திட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

அதனை ஒட்டிய பூர்வாங்கச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ள போதிலும், அதனைச் செயற்படுத்துவதை உறுதிப்படுத்துவதற்கான சட்டமூலமே கடந்த ஓராண்டுக்கு மேலாக நாடாளுமன்றில் நிறைவேற்றப்படாமல் இழுத்தடிக்கப்பட்டுவருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## பா.ஜ.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இலங்கை வந்த அவரைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வரவேற்றார்.

நேற்று நாடாளுமன்றத்துக்கு தமிழிசை சௌந்தரராஜனை அழைத்துச் சென்ற சிறீதரன், அங்கு அவருக்கு மதிய போசனத்தையும் வழங்கி உபசரித்திருந்தார்.

அதேசமயம், கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், மாவை சேனாதிராசா ஆகியோரை நேற்றிரவு சந்தித்த தமிழிசை, அவர்களுடன் அளவளாவிய பின்னர் விருந்துபசாரத்திலும் கலந்துகொண்டார்.

இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் தமிழிசை நாளை முள்ளிவாய்க்காலுக்கும் செல்லவிருக்கின்றார்.

தமிழகத்தின் முன்னாள் மூத்த அரசியல்வாதியும், அழகு தமிழ் பேச்சாளருமான குமரி அனந்தனின் மகள் தமிழிசை என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## அரசமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மும்முரமாக முன் நகர்ந்தது என விடயமறிந்த வட்டாரங்கள் ‘காலைக்கதிருக்கு’த் தகவல் வெளியிட்டன.

பிரதமர் தலைமையில் நேற்று மீண்டும் வழிகாட்டல் குழு கூடியது. கூட்டு எதிரணியின் பிரதிநிதி தினேஷ் குணவர்த்தனவும், ஜாதிக ஹெல உறுமயவின் பிரதிநிதி அமைச்சர் சம்பிக்க ரணவக்கவும் நேற்றைய கூட்டத்தில் பங்குபற்றவில்லை.

எனினும், வழிகாட்டல் குழு தனது இடைக்கால அறிக்கையின் நகலை இறுதி செய்யும் பணியைத் துரிதமாக முன்னெடுத்தது.

சம்பந்தப்பட்ட வாசகங்களை ஒவ்வொன்றாக வாசித்து, சாதக, பாதகங்களை அங்கீகரிக்கும் நடவடிக்கை வேகமாக முன் நகர்ந்தது.

அதிகாரப் பகிர்வு விடயத்தில் காணி அதிகார விவகாரம் தவிர, ஏனைய அம்சங்கள் தொடர்பான வாசகங்கள் இறுதி செய்யப்பட்டுவிட்டன எனத் தெரிகின்றது.

காணாமற்போனோர் விடயத்தில் பௌத்த மத பீடங்களின் அழுத்தத்துக்கு அடி பணிந்து நேற்றுக் காலையில் திடீர் ‘பல்டி’ அடித்துப் பின்வாங்கிய அரசுத் தரப்பு, நேற்று மாலையில் அரசமைப்புக் கவுன்ஸிலின் வழிகாட்டல் குழுவின் கூட்டத்தில் அதிகாரப் பகிர்வு விடயத்தில் மிகத் தாராளமாக நடந்து கொண்டது எனச் சுட்டிக்காட்டப்பட்டது. (உ)

## ஏ.எல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யுள்ளது.

நாடுமுழுவதும் 2 ஆயிரத்து 230 நிலையங்களில் பரீட்சைகள் நடைபெற உள்ளன என்று பரீட்சைகள் திணைக்களம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சைக்காக 3 இலட்சத்து 15 ஆயிரத்து 227 பரீட்சார்த்திகள் தோற்ற உள்ளனர்.

இதேவேளை தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை ஆகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இப்பரீட்சை நாடுபூராகவுமுள்ள 3 ஆயிரத்து 14 பரீட்சை நிலையங்களில் இடம்பெறும்.

புலமைப்பரிசில் பரீட்சைக்கு 3 இலட்சத்து 56 ஆயிரத்து 728 பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்ற உள்ளனர் எனவும் பரீட்சைகள் திணைக்களம் கூறியுள்ளது. (ம)

## விக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
னரும் உடன்பட்டுள்ளனர் என்றும் –

இரு தரப்புகளுக்கும் இடையில் தொடர்பாளர்களாகச் செயற்படும் வட்டாரங்கள் ‘காலைக்கதிருக்கு’த் தெரிவித்தன.

திருமதி அனந்தி சசிதரனையும், சர்வேஸ்வரனையும் தற்காலிகமாக வடக்கு மாகாண அமைச்சர்களாகத் தான் நியமித்திருக்கின்றமை தொடர்பாக அந்த நியமனம் நடைபெற்ற அன்றே மின்னஞ்சல் மூலம் சம்பந்தனுக்கு அறிவித்திருந்தார் முதல்வர் விக்னேஸ்வரன். தற்காலிக நியமனத்துக்கான தமது பக்கக் காரணங்களையும் முதல்வர் அக்கடிதத்தில் விளக்கியிருந்தார் எனக் கருதப்படுகின்றது.

அக்கடிதம் அனுப்பப்பட்ட சமயம் ஜேர்மனிக்கு விஜயம் செய்திருந்த சம்பந்தன் நேற்று அக்கடிதத்துக்குப் பதில் அனுப்பி வைத்திருந்தார்.

முரண்பாடுகளின்றி நிலைமையைச் சுமுகமாகத் தீர்த்து விடயங்களை முன்னெடுப்பதற்கான சமரச நிலையை ஏற்படுத்த வேண்டும் என அந்தக் கடிதத்தில் சம்பந்தன் ஐயா குறிப்பிட்டார் என்றும் –

அதையே தாமும் உறுதிப்படுத்தி சம்பந்தன் ஐயாவுக்குப் பதில் கடிதம் அனுப்பி வைத்தார் என்றும் –

அந்தப் பதில் கடிதத்தில் மிக விரைவில் கொழும்பில் சம்பந்தன் ஐயாவைச் சந்தித்து விடயங்களைச் சுமுகமாக்குவதற்கான ஏற்பாடுகள் குறித்துக் கலந்துரையாடுவதற்குத் தான் பார்த்திருக்கின்றார் என்ற செய்தியைத் தாம் குறிப்பிட்டிருந்தார் என்றும் –

விக்னேஸ்வரன் நேற்றுத் தமக்குநெருங்கியதரப்பினரிடம் தெரிவித்தார்.

அமைச்சர்கள் டெனீஸ்வரன், சத்தியலிங்கம் ஆகியோரின் செயற்பாடுகள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரிப்பதற்குத் தனியான விசாரணைக்குழு ஒன்றையும், முன்னாள் அமைச்சர்கள் பொ.ஐங்கரநேசன், குருகுலராசா ஆகியோர் தொடர்பான விசாரணை அறிக்கையை மீளாய்வு செய்வதற்குப் பிறிதொரு குழு ஒன்றையும் அமைப்பார் என முதலமைச்சர் விக்னேஸ்வரன் அறிவித்துள்ள சூழலில் –

அத்தகைய குழுவை முதல்வர் நியமிக்கின்றமை சட்ட ரீதியானது அல்ல என்பதால் அதனைத் தாங்கள் ஏற்கமாட்டார்கள் என்று அமைச்சர்கள் சத்தியலிங்கமும், டெனீஸ்வரனும் பதில் அறிவிப்பு விடுத்த பின்னணியில் –

முதலமைச்சர் உட்பட ஐந்து அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு மாகாண சபையின் தெரிவுக் குழு ஒன்று நியமிக்கப்படவேண்டும் என்று வடக்கு மாகாண சபையின் ஆளுந் தரப்புக்குள் எதிரணிபோல்செயற்படும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிரமுகர் அ.பரஞ்சோதி பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்துள்ள சந்தர்ப்பத்தில் –

வடக்கு மாகாண சபையின் சபைக் கூட்டத்துக்கான நிகழ்ச்சி ஒழுங்குக் குழு நேற்றுக் காலை அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் தலைமையில் கூடியது.

முன்னதாக அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானத்துக்கு மின்னஞ்சல் மூலம் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்த முதல்வர் விக்னேஸ்வரன், தாம் அமைத்த, தாம் இனி அமைக்கவிருக்கும் விசாரணைக் குழுக்கள் சட்டபூர்வமானவை. எனவே, அத்தகைய விசாரணைக் குழுக்கள் இருக்கத்தக்கனவாக வேறு தெரிவுக் குழு ஒன்றை அமைக்கத் தேவை

பக்கம் 03 »

# அரச சார்பற்ற நிறுவனங்களை தடைசெய்யும் சட்டம் வேண்டும்

## கோரிக்கை விடுக்கிறது பொதுபலசேனா



கொழும்பு, ஜூலை 06
நாட்டில் செயற்படுகின்ற அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்களையும் தடை செய்வதற்கான சட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்று பேரினவாதக் குழுக்களில் பிரதான அமைப்பான பொதுபல சேனா, அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சில அரசசார்பற்ற நிறுவனங்கள் போலியாகப் பெயர்களைப் பதிவுசெய்து, மதங்களையும், பிரச்சினைகளையும் நாட்டில் பரப்பி வருவதாகப் பொதுபல சேனா குற்றம் சாட்டியுள்ளது.

பொதுபல சேனா ஏற்பாடு செய்திருந்த வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அரச சார்பற்ற நிறுவனங்களைக் கட்டுப்படுத்துவதற்காக சட்டம் ஒன்றைக் கொண்டுவர நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ நடவடிக்கை எடுத்துவருகின்றார் என்று அண்மையில் தகவல் ஒன்று வெளியிடப்பட்டிருந்தது.

இந்தநிலையில் பொது பல சேனாவின் ஊடகவியலாளர் சந்திப்பின்போது இது தொடர்பில் கேள்வி எழுப் பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த போதே பொதுபல சேனாவின் நிறைவேற்று உறுப்பினர் டிலந்த வித்தானகே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டிலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்களை மட்டு மல்ல, பல நிறுவனங்களை கண்காணிப்புச் செய்யும் சட்டங்கள் மற்றும் நிறுவனங்களை அமைக்க வேண்டும். அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பான செயலகம் ஒன்று இருக்கின்றது. சுனாமி ஏற்பட்டபோது அந்தச் செயலகம் அமைப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்டது.

அதன் அறிக்கையில் அரச சார்பற்ற நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டு அதன் பெயர் ஒன்றியம், நல்லாட்சி, சமாதானம் என்ற பெயரைப் பயன்படுத்தி மதப் பிரசாரங்களையே செய்கின்றன. இந்த நாட்டில் பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதற்குப் பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வெளிநாடுகளில் இருந்து நிதி வழங்கப்படுகிறது.

சர்வோதயம் போன்ற அரச சார்பற்ற நிறுவனங்களும் உண்மையான சேவைகளை வழங்கும் நிறுவனங்களும் உள்ளன. ஆனால், இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவமயமாக்கலை மேற்கொள்வதற்காக சில அரச சார்பற்ற நிறுவனங்கள் அமைக்கப்படுகின்றன. எனவே நீதி அமைச்சர் இவற்றைக் கட்டுப்படுத்த அல்ல, தடை செய்வதற்கான சட்டங்களையே நிறைவேற்ற வேண்டும்.-என்றார்.

# இலங்கை வந்த சவூதி இளவரசருக்கு விசேட விருது வழங்கினார் ஜனாதிபதி

கொழும்பு, ஜூலை 06
முன்னணி சர்வதேசதொழில் முனைவோர்களில் ஒருவரான சவூதி இளவரசர் அல்வலித் பின் தலால் பின் அப்துல் அஸீஸுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விசேட விருதொன்றை வழங்கியுள்ளார்.

அவசரவிஜயம் மேற்கொண்டு நேற்றுமுன்தினம் காலை இலங்கை வந்த இளவரசர் தலால் பின் அப்துல் அஸீஸ், ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துக் கலந்துரையாடலில் ஈடுபட்டார்.



இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் தமது திருப்தியை வெளிப்படுத்திய இளவரசர் இலங்கையில் வர்த்தகம் மற்றும் சுற்றுலாத் துறையில் முதலீடு மேற்கொள்வது தொடர்பில் அவதானம் செலுத்துகிறார் எனத் தெரிவித்தார்.

சர்வதேச ரீதியில் உயர்ந்தளவு முதலீட்டை மேற் கொள்ளும் சவூதி முதலீட் டாளர்கள் மற்றும் வர்த்தகர்களை எதிர் காலத்தில் இலங்கையின் முதலீட்டுவாய்ப்புகளில்கவனம் செலுத்த எதிர்பார்க்கிறார் எனத் தெரிவித்த சவூதி இளவரசர் அந்த முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பில் தெளிவுபடுத்துவதற்காக வர்த்தக சமூகத்தவர்களுடன் தமது நாட்டுக்கு வருகை தருமாறும் ஜனாதிபதிக்கு அழைப்பு விடுத்தார்.

இலங்கையின் மனங்கவரும் காலநிலை, பசுமை சுற்றாடல், வனப்பான கடற்கரைகள், வரலாற்றுத் தளங்கள் போன்றவை சுற்றுலாத்துறையின் ஈர்ப்பை வென்றுள்ளன. அத்துடன், இலங்கையில் சுற்றுலாத் துறைக்கு அதிகவாய்ப்புக்கள்இருக்கின்றன எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, சவூதிஅரேபியா தொன்றுதொட்டே இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்காக வழங்கும் ஒத்துழைப்பைப் பாராட்டிய ஜனாதிபதி, அண்மையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கிய உதவிக்கும் நன்றி தெரிவித்தார். (எ)

# நீர் உள்வாங்கும் நிலையம் எழுத்தூரில் நாளை திறப்பு

மன்னார், எழுத்தூரில் கடல் நீரை குடிதண்ணீராக்கும்நிலையத்தை (நீர்உள்வாங்கும் நிலையம்) பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாளை திறந்து வைக்கவுள்ளார்.

திறந்து வைக்கப்படவுள்ள இந்த நீர் உள்வாங்கும் நிலையம் தொடர்பான ஒருங்கிணைப்புக் கூட்டம் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நேற்று முன்தினம் நாடாளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் செயலாளர் சரத் சந்திரவிதான, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் தலைவர் கே.ஏ. அன்சார், வட மாகாணசபை உறுப்பினர் எச்.எம். றயீஸ், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாறுக் மற்றும் அமைச்சின் உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (எ)



## வல்லிபுர ஆழ்வார் ஆலய மணவாளக்கோல விழா

துன்னாலை வடக்கு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மணவாளக்கோல (திருக்கல்யாணம்) திருவிழா சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது.

அன்று காலை 8 மணி முதல் 1008 சங்காபிஷேகம் நடைபெற்று பிற்பகல் 3.45 மணி முதல் வசந்த மண்டபத்தில் விசேட பூசை, மகாவிஷ்ணுவுக்கும் பூதேவி ஸ்ரீதேவிக்கும் திருக்கல்யாணம் நடைபெற்று தொடர்ந்து சக்கரத்தாழ்வாரும் பூதேவி, ஸ்ரீதேவி சமேதரராக மகாவிஷ்ணுமூர்த்தியும் உள்வீதி வெளிவீதிஉலாவந்துஅடியவர்களுக்கு அருள்பாலிப்பார். (இ)

## பூநகரி உயர்தர மாணவர் ஒன்றுகூடல் இன்று

பூநகரி மத்திய கல்லூரியின் உயர்தர மாணவர்களின் வருடாந்த ஒன்று கூடல் இன்று வியாழக் கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு உயர்தர மாணவர் மன்றத் தலைவர் பி.சுதீசன் தலைமையில்பாடசாலைபிரதான மண்ட பத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பூநகரி மத்திய கல்லூரியின்பழையமாணவரும் யாழ். போதனா வைத்திய சாலையின் வைத்தியருமான க.மதிவதன், சிறப்பு விருந்தினராக பூநகரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.தர்மரத்தினம் ஆகியோர் கலந்து வொள்ள வுள்ளனர். (இ)

## வரணியில் நாளை சமுர்த்திக் கூட்டம்

தென்மராட்சி மந்துவில் வடக்கு, சமுர்த்திவங்கி முகாமையாளருடன் பெண் தலைமைத் துவக் குடும்பங்கள், போராளிக் குடும்பங்கள், தாய் தந்தையை இழந்தசிறுவர்களின்பாதுகாவலர்கள், முழுநேர விவசாயத்தை மேற்கொள்வோருக்கான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு, வரணி மத்திய கல்லூரி மண்டபத்தில் பிரதேச செயலர் தலைமையில் இடம்பெறவுள்ளது. (இ)

## நாளை மின் தடை

உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக் கிழமை -

காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை **யாழ் பிரதேசத்தில்** கம்பர்மலை, கொத்தாண்டார் குளம், கோவில்வயல், மல்வில், முகாவில் **வவுனியா பிரதேசத்தில்** குருமன்காடு பிரதேசம் ஆகிய இடங்களில் மின்சாரம்தடைப்படும்என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

## அரியாலைப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு ஏ.ஆர்.வி. தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜூலை 06
யாழ்ப்பாணம் மாநகர சபைஎல்லைக்குள் அரியாலை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி (A.R.V) கீழ்வரும் இடங்களில் வைத்து வழங்கப்படும்.

**இதன்படி, இன்று வியாழக்கிழமை:**

★ காலை 9 மணி முதல் 11மணிவரை- அருணோதயா சனசமூக நிலையம்.

★ முற்பகல் 11 மணி முதல் ஒரு மணிவரை - திருமகள் சனசமூக நிலையம் திருமகள் வீதி, அரியாலை.

★ பிற்பகல் 2.30 மணி முதல் 4 மணிவரை-மலர்மகள் வீதி அரியாலை.

**நாளை வெள்ளிக்கிழமை:**

★ காலை 9 மணி முதல் 11 மணி வரை - பாரதி சனசமூக நிலையம், நாயன் மார் கட்டு, செம்மணி வீதி, அரியாலை.

★ முற்பகல் 11 மணி முதல் ஒரு மணிவரை - அம்பாள் சனசமூக நிலையம் பேச்சி அம்மன் கோவிலடி, நாயன்மார்கட்டு.

★ பிற்பகல் 2.30 மணி முதல்4மணிவரை-மகேஸ்வரி பாடசாலை அருகில் நாயன் மார்கட்டு.

வளர்ப்பு நாய்களுக்கான உரிமக் கட்டணமாக 30 ரூபா செலுத்தப்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## குருநகர் தூய கார்மேல் அன்னையின் திருவிழா

குருநகர் தூய கார்மேல் அன்னை ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் 09 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 5.30 மணிக்குத் திருச்செபமாலையுடன் ஆரம்பமாகி எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை வழிபாடும் 16 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை6.30 மணிக்குத்திருவிழாத் திருப்பலியும் மாலை 5.30 மணிக்குத்திருச்சொரூப பவனியும் நடைபெறும். (இ)


## சிவத்தமிழ்ச் செல்வியின் குருபூசை நிகழ்வில் சிவாச்சாரியார்களுக்குக் கௌரவம்








துர்க்கா துரந்தரி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் குருபூசைத்தினம் நேற்றுமுன்தினம் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது. அன்றைய நிகழ்வில் மூத்த சிவாச்சாரியார்களான திருகோணமலை பத்திரகாளி அம்பாள் ஆலய அறங்காவலர் சிவஸ்ரீ இ.ரவிச்சந்திரக் குருக்கள், இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்கள், சோமஸ்கந்தக் குருக்கள் ஆகியோர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (விரிவான செய்தி 09 ஆம் பக்கத்தில்) (இ)




## அமெரிக்கத் தூதரகம் மீது ஐ.எஸ். தாக்குதல் திட்டம்

# ஊடகத்திடம் விசேட தகவல் இருந்தால் தகவல் அறிந்து விசாரிக்க உத்தரவு

### சபையில் நேற்று ரணில்

கொழும்பு, ஜூலை 06

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் மீது பயங்கரவாதத் தாக்குதலொன்றை நடத்த ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் திட்டமிட்டுள்ளதாக வெளியான செய்தி தொடர்பில் சம்பந்தப்பட்ட ஊடகத்திடம் விசேட தகவல் எதுவுமிருப்பின் அதைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை பிரதமரிடம் நேரடிக் கேள்வி – பதில் சுற்றின்போது ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் மீது தாக்குதல் நடத்த ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் திட்டமிட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியிருந்த நிலையில், அந்தத் தகவலை அமெரிக்கத் தூதரகம் நிராகரித்துள்ளதாகத் தெரிவித்த முஜிபுர் ரஹ்மான், இது புனையப்பட்ட செய்தியா என்றும், இது தொடர்பில் விசாரணையொன்று நடத்தவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க –

"உண்மையில் இது தொடர்பில் செய்தி வெளியாகியிருந்ததுடன் (அமெரிக்க) தூதரகமும் அதை நிராகரித்திருந்தது. எனினும், அவர்களிடம் (சம்பந்தப்பட்ட ஊடகத்திடம்) விசேட தகவல் இருந்ததா என்று எமக்குத் தெரியாது. ஆகவே, அவர்களிடம் விசேட தகவல் இருந்தால் அதைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்குக் கூறியுள்ளேன்" – என்றார். (உ)

# கிளிநொச்சி அறிவகத்தில் நேற்று கரும்புலிகளுக்கு நினைவு அஞ்சலி

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில்





தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி அலுவலகமான அறிவகத்தில் கரும்புலிகள் நினைவு நிகழ்வு நேற்று மாலை உணர்வுபூர்வமாக இடம்பெற்றது.

ஆனையிறவுப் படைத்தளம் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலின்போது களப்பலியாகிய மேஜர் நந்தனின் சகோதரன் மகேஸ்வரன் ஈகச்சுடர் ஏற்றி, கரும்புலிகள் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

பின்னர் அந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்த மாவீரர்களின் பெற்றோர், உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து, கரும்புலிகள் தொடர்பான நினைவுப் பகிர்வுகளும் இடம்பெற்றன.

#### கப்டன் மில்லருக்கும் நேற்று அஞ்சலி

இதேவேளை, நெல்லியடியில் முதலாவது கரும்புலி கப்டன் மில்லர் தாக்குதல் மேற்கொண்டு களப்பலியாகிய இடத்தில் நேற்று மாலை அஞ்சலி செலுத்தப்பட்டது என இணைய ஊடகங்கள் தகவல் வெளியிட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ம)


நெல்லியடியில் நேற்று...

## ஊடக சுதந்திரத்தைப் பெற்றுத் தந்த எம்மையே 'வீட்டுக்கு அனுப்ப' முயற்சி!

### ஊடகங்களைச் சாடுகின்றார் ஜனாதிபதி

நாட்டில் தற்போது எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால், ஊடகங்களே பிரச்சினைகள் இருப்பதாகக் காட்டி வருகின்றன என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இவ்வாறான செயற்பாடுகள் மூலம் நாட்டை நெருக்கடி நிலை ஒன்றுக்குள் தள்ளுவதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது எனவும் அவர் கவலை வெளியிட்டார்.

வீடுகள் இல்லாத படையினரின் குடும்பங்களுக்கு வீடுகள் வழங்கும் நிகழ்வு நேறடறு இடம்பெற்றது. அங்கு அவர் மேலும் கூறுகையில் –

ஊடகங்கள் எமது அரசாங்கத்திற்கு எதிராக கடுமையான தாக்குதலை தொடுத்து வருகின்றன. அரசாங்கம் நாளைய தினம் கவிழ்ந்துவிடும் என்று ஊடகங்களில் காட்டப்படுகின்றது. ஊடகங்களுக்கு நாங்களே இந்தச் சுதந்திரத்தை வழங்கினோம்.

நாங்கள் ஆட்சிக்கு வரும் முன்னர் இந்த நாட்டில் எத்தனை ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டனர்? எத்தனை ஊடக நிறுவனங்கள் தீ வைக்கப்பட்டன? எத்தனை ஊடகவியலாளர்கள் காணாமற்போனார்கள்? எத்தனை ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டுச் சென்றனர்?

இவற்றையெல்லாம் ஊடகங்கள் மறந்துவிட்டனவா?– என்றார் ஜனாதிபதி. (ம)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.07.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.